Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (2-5-66) இதழ் 84

பராபவ சித்திரை 19 முஹர்ரம் பிறை 10 திங்கட்கிழமை

## யாழ்ப்பாணம் விளையாட்டரங்கு மாநகரசபையிடம் கையளிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் விளையாட்டரங்கை (ஸ்டேடியம்) மாகரசபையிடம் ஸ்டேடியக் கமிட்டி கையளித்திருப்பதாக யாழ். மேயர் திரு. அல்பிரட் துரையப்பா தெரிவித்தார்.

நேற்று முன்தினமிரவு யாழ்ப்பாண ஸ்டேடியத்தில் நடைபெற்ற நடிகர் எஸ். எஸ். ஆர். கோஷ்டியினரின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்துப் பேசும்போதே திரு. துரையப்பா இத்தகவலை வெளியிட்டார்.

இதுவரை காலமும் ஸ்டேடியத்தை நிர்வகித்துவந்த யாழ். ஸ்டேடியக் கமிட்டி மாநகரசபையிடம் சிலமணி நேரத்துக்கு முன்பாகத்தான் கையளித்ததென மேயர் பேசுகையில் கூறினார்.

# சகலசமூகத்தினரையும் பாதுகாப்போம்



## கடமையைச் செய்வதில் அரசாங்கம் பின்னிற்காது

### காலிபேஸ் திடலில் நடைபெற்ற கூட்டத்தில் பிரதமர் டட்லி முழக்கம்

கொழும்பு, திங்கள்

"நாட்டின் மக்கள் எந்த சமூகத்தவராய் இருந்தாலும் இந்த நாட்டுப் பிரஜைகள்தான். அவர்களைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் கடமை அந்தக் கடமையைச் செய்வதில் நாம் பின்நிற்கமாட்டோம்" என்று பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயகா நேற்று காலிபேஸ் திடலில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

மேதினத்தை யொட்டி நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊர்வலங்கள் யாவும் கவர்ச்சியாகவும் ஒழுங்காகவும் நடைபெற்றதுடன் எதுவித அசம்பாவித சம்பவங்களும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது, முன்னர் எப்போதையும் விட இம்முறை பலத்த பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் இருந்தன. எதிர்க்கட்சியினர் நடத்திய கூட்டங்களில் வகுப்புவாத கருத்துக்களோ கோஷங்களோ இருக்கவில்லை.

இன்று நாட்டில் உள்ள நிலைமையைச் சமாளிக்கவும் ஜனநாயக பாரம்பரியத்தைப் பாதுகாக்கவும் அவசரகால நிலைமை அமுலில் இருக்க வேண்டியது அவசியமாகவிருக்கின்றது. அவசரகால நிலைமையை வைத்துக்கொண்டு ஆட்சிநடத்துவதாக எம்மைப் பார்த்து கண்டனக் குரல் எழுப்பும்

(8-ம் பக்கம் பார்க்க)

## கூட்டரசாங்க கட்சிகளின் கூட்டம்

கொழும்பு, திங்கள்

கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆகிய கூட்டாட்சிகட்சிகள் நடத்திய மேதினக் கூட்டம் சுதந்திர சதுக்கத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமா பண்டாரநாயகா தலைமையில் நடைபெற்றது, கடந்த முறைகளைப் போல் கூட்டத்திலும் ஊர்வலத்திலும் வகுப்புவாதக்கோஷங்கள் இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

முன் எப்போதையையும் விட இம்முறை பொலிஸ் பந்தோபஸ்து ஏற்பாடுகள் மும்முரமாகவிருந்தன.

## ஊர்வலத்தில் ஏவுகணைகள்

### மாஸ்கோவில் மே தினம்

மாஸ்கோ, மே 1

உலக தொழிலாளர் தினமான மேதினம் இன்று மாஸ்கோவில் பெரிய அளவில் கொண்டாடப்பட்டது. இதனையொட்டி நடைபெற்ற விசேஷ ராணுவ ஊர்வலத்தில் கண்டம்விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள் உட்பட இதர யுத்த ஆயுதங்களும் இடம்பெற்றன. சோவியத் பாதுகாப்பு மந்திரி மார்ஷல் மலினேஸ்கி ராணுவ மரியாதையை ஏற்றுக்கொண்டார். அவர் மேதினத்தை யொட்டிப் பேசுகையில் ரஷ்யா உலக சமாதானத்துக்காகவே பாடுபடுகின்றது. அதற்காக நாட்[illegible] படுத்திக்கொள்ள அதுவிரும்பவில்லையென்றார்.

உ

குகமயம்

## திருமண அழைப்பு

செல்வி மீனலோஜினி — செல்வன் பாலகுமாரன்

அன்புடையீர்,

நிகழும் பராபவ வரு சித்திரை மீ 21 உ (4-5-66) புதன்கிழமை இரவு 9-15 மணிமுதல் 11-15 மணிவரை வரும் சுப முகூர்த்தத்தில்

(நல்லூர்த் தேவஸ்தான முன்னைநாள் காவலர்)
குகஸ்ரீ இ. ஷண்முகதாஸ மாப்பாண முதலியார் அவர்களது ஏகபுத்திரி
திருநிறை செல்வி
மீனலோஜினி
அவர்கட்கும்

திருநிறை செல்வன்
சி. பாலகுமாரன்
(Proctor S. C. & notary public)
அவர்கட்கும்

நல்லைக்கந்தன் திருவருள் துணைகொண்டு திருமணம் நடைபெற நிச்சயித்திருப்பதால் தாங்கள், தங்கள் சுற்றம்சூழச் சமுகந்தந்து சிறப்பிக்கும் வண்ணம் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்

திருமதி இ. ஷண்முகதாஸ மாப்பாண முதலியார் அவர்களும்,
திரு. இ. குமாரதாஸ மாப்பாண முதலியார் அவர்களும்,
(காவலர், நல்லூர்க்கந்தஸ்வாமி கோவில்)
பாரியாரும்,
திரு. S. கந்தையா அவர்களும்
(Deputy Shroff Eastern Bank Ltd.)
பாரியாரும்

112, கோவில் வீதி, :: :: நல்லூர்.

## தமிழ்ப் பல்கலைக்கழகம் அரசாங்கம் ஏற்றுள்ளது

### மொழிவழித் தொழிற்சங்க கூட்டத்தில் மந்திரி திருச்செல்வம்

யாழ்ப்பாணம், திங்கள்

'தமிழரசுக்கட்சியின் ஒரே கொள்கை அன்றும் இன்றும் சமஷ்டிதான், இந்தக்கொள்கையை அடைவதில் கட்சி தொடர்ந்து உழைக்கும். தமிழ் பல்கலைக் கழகம் நிறுவப்படவேண்டுமென்ற தமிழரசுக் கட்சியின் கொள்கையை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது, பாரத்தித் துறையிலிருந்து பொத்துவில் வரையான மக்களும் இதை ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

இவ்வாறு ஸ்தல ஸ்தாபன மந்திரி திரு, எம் திருச்செல்வம் யாழ் மாநகரசபை முன்றலில் நடைபெற்ற மொழிவழித் தொழிற் சங்கங்களினது கூட்டு மேதினக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

திரு திருச்செல்வம்

(8-ம் பக்கம் பார்க்க)

## பரந்து வாழ்வதாலேயே தொழிலாளர் நன்மைபெறுவர்

### தேசீய தொழிற் சங்க சம்மேளனத்தில் ஜி. ஜி. பேச்சு

யாழ்ப்பாணம், திங்கள்

"தொழிலாளர்களைப் பற்றிப் பேசுவதற்கு எனக்கென்ன உரிமை இருக்கிறதென்று சிலர் கேட்கிறார்கள். கந்தசாமி சுடப்பட்டபொழுது ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்திற்கு எதிராக காசுவாங்காமல் வழக்கு பேசிய எனக்கு தொழிலாளர் பற்றி பேச உரிமையில்லையா?"

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்ற அகில இலங்கை தேசிய தொழிற்சங்க சம்மேளன மேதினக் கூட்டத்திற்கு தலைமை தாங்கியசம்மேளன தலைவர் திரு ஜி. ஜி பொன்னம்பலம் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்,

தேசியக் கொடி, சம்மேளனக் கொடி தமிழ் காங்கிரஸ் கொடி ஆகியவற்றை திரு ஜி ஜி பொன்னம்பலம் ஆரம்பத்தில் ஏற்றிவைத்

(5-ம் பக்கம் பார்க்க)

## 'கம்யூனிஸ்ட் கட்சி தமிழரின் விரோதியல்ல'

### வாலிப சம்மேளன தலைவர் பேச்சு

யாழ்ப்பாணம், திங்கள்

'இம்முறை மே தினம் யு. என். பி. — தமிழரசுக் கட்சி அரசாங்கத்தின் முதலாவது அவசரகால நிலைமையின் கீழ் கொண்டாடப்படுகிறது. கடந்த நான்கு மாத காலமாக இந்த நாட்டின் அரசியல்வாழ்க்கை ஸ்தம்பித்துள்ளது. பிரபல தொழிற்சங்கவாதிகளை அரசாங்கம் பழிவாங்குமுகமாக வேலைநீக்கமும் தற்காலிக வேலைநீக்கமும் இடமாற்றமும் செய்துள்ளது.'

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் வாலிப சம்மேளனத்தலைவர் திரு. சரத் முத்தெட்டுகம யாழ்ப்பா

(5-ம் பக்கம் பார்க்க)

## "புரட்சிகரமான பொருளாதார மாற்றம் வேண்டும்"

யாழ்ப்பாணம், திங்கள்

"மதம் விட்டு மதம் மாறுவதினால் சிறுபான்மைத்தமிழர்களின் எந்த விதமான பிரச்னைகளும் தீர்ந்துவிடமாட்டாது புரட்சிகரமான ஒரு பொருளாதார மாற்றத்தினால் பிரச்னைகளை

(8-ம் பக்கம் பார்க்க)

## விற்பனைக்கு

வவுனியா புதிய பஸ் நிலையத்திற் கருகாமையில் சகல வசதிகளுடன் கடை ஒன்று உடனடியாக விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு சுந்தானந்த பவான், வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### தேவை

ஒரேஒரு பிளேட்டில் நூற்றுக் கணக்காக நோவில்லாமலும் சுலபமாகவும், சுத்தமாகவும் முகச்சவரஞ் செய்யக் கூடிய உலகபிரசித்தி பெற்ற பிளேட் சாப்பினிங் கொம்பவுண்ட் விற்பனை செய்வதற்கு ஒவ்வொரு ஊரிலும் ஏசண்டுகள் தேவை. ஒமேகா கொடிகாமம். 283

சந்திரா வெல்டிங்ஸ் வேக்ஸ்க்கு ஓர் கணக்குப்பிள்ளை தேவை. பிணைப்பணம் 1000/- ரூபாயும் கிராம சேவகரினதும், பள்ளிக்கூட அத்தாட்சி பத்திரமும் தேவை. 5-5-66க்கு முன் விண்ணப்பிக்கம். சந்திரா வெல்டிங்ஸ்வேக்ஸ். 6, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். 286

### விற்பனைக்கு

வவனியா நகரசபை எல்லைக்குள் வேப்பங்குளத்தில் (பிரதான வீதி) 5 ஏக்கர் நிலம் விற்பனைக்குண்டு. 30 அடி அகலமுள்ள கிணறு அடங்கிய இக்காணியில், 75 தென்னை மரங்களும், 30 மா மரங்களும் வேறு பிரயோசனங்களும் உண்டு. வீடு கட்டவும் தோட்டம் செய்யவும் உகந்த இடம். எஸ். சந்திரசேகரம், தபாற் கந்தோர், வவனியா. 291

கட்டடம் கட்டுவதற்கு பொருத்தமான 2 1/2 பரப்பு நிலம் விற்பனைக்கு உண்டு. சந்திக்கு அருகாமையிலுள்ளது. கிட்டிய மின்சார வசதி உடையது. பரப்பு 6000 ரூபாவுக்கு மேல். விபரங்களுக்கு: பி. பி. பஞ்சதிருசிங்கம், கோப்பாய். 289

### கல்வி

புதிய இந்துசமய நூல் பிற்சேர்க்கை 1967 - 1968 G. C. E. சைவசமயபாடப் பரீட்சைக்குரிய புதிய பகுதி — விலை - சதம் /50. புதிய இந்துசமயநூல் இரண்டு புத்தங்களும் ரூபா 3-00. 290

தட்டெழுத்து சுருக்கெழுத்து ஆங்கிலம், தமிழ் ஆகியவற்றிலும், கணக்குப்பதிவியல், ஜி. சி. ஈ. கலை, விஞ்ஞானம், வர்த்தகம், ஆங்கிலம், சிங்களம். எண்கணிதம், தூயகணிதம் காலை மாலை வகுப்புகள். மாலை வகுப்புகள் இரவு 8 மணி வரையும் நடைபெறும். மோட்டார் மெக்கானிஷம் கராஜ் வசதிகளுடன் கூடிய சீக்கிரத்தில் ஆரம்பமாகும். யாழ். கல்லூரி, 426, ஆஸ்பத்திரி ரோட், யாழ்ப்பாணம். பெண்கள் கிளை: 29, பருத்தித்துறை ரோட், யாழ்ப்பாணம். 288

# 'குடிசைக் கைத்தொழில் மூலம் பல பிரச்னைகளை தீர்க்கலாம்'

சுழிபுரம், ஞாயிறு

அரசாங்கத்தின் உதவியில்லாமல் நாமும் இயங்கலாம் என்பதை எமது இளம் சந்ததியினர் பல துறைகளில் காட்டிவருகின்றனர். இன்று ஒவ்வொரு கிராமங்களிலும் நடைபெறும் சிறு குடிசை கைத்தொழில்கள் இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். எமது பகுதிகளில் இதுவரை காலமும், நெசவுவேலை, மட்டுமே நடைபெற்றுவந்தது. ஆனல் இன்று தும்புத் தொழிற்சாலை, பட்டுநூல் தொழிற்சாலை, கயிற்றுத் தொழிற்சாலை, பன்னவேலை நிலையங்கள், யந்திரசாதன தொழில் நிலையங்கள் போன்ற பல தொழில் நிலையங்களாக விரிவடைந்துள்ளதை காண்கின்றோம்'' என சுழிபுரம் இந்திரா தையல் கலைமன்ற திறப்பு விழாவுக்கு தலைமைவகித்துப் பேசிய சுழிபுரம் கிராம சபைத்தலைவர் சு. கந்தசுவாமி பேசுகையில் குறிப்பிட்டார்.

சுழிபுரம் பெரியதம்பிரான் கோயிலுக்கு அருகாமையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தையல் நிலையத்தை இளைப்பாறிய கிராமாதிகாரி திரு. சி. அப்புத்துரை சம்பிரதாய முறைப்படி திறந்துவைத்தார்.

திரு. சு. கந்தசாமி மேலும் பேசுகையில் கிராம மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதுடன் வேலையின்றி அல்லல்படும் நிலைமை இப்படியான தனியார் முயற்சி மூலம் நீக்கப்படுகின்றது. எமது உணவு, உடை ஆகியவற்றை நாமே கவனித்தால் நாம் எவரையும் எதிர்பார்க்கவேண்டியது இல்லை என்றூர்.

# சமாதான சபைகளுக்கு சட்டரீதியான அந்தஸ்து

மாவிட்டபுரம், ஞாயிறு

கிராமங்களில் ஏற்படும் சிறு சச்சரவுகளைப் போக்கக் கூடிய வகையில் இயங்கிவரும் சமாதான சபைகளுக்கு சட்டரீதியான அந்தஸ்து வழங்க நீதிஅமைச்சு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

கிராம மக்கள் மத்தியில் ஏற்படும் சச்சரவு, சண்டைகளை சமாதான முறையில் நீதிமன்றம்வரையில் செல்லவிடாது இச் சமாதான சபைகள் தீர்த்து வருவதால் இச்சபைகள் அளிக்கும் தீர்மானம் சட்ட ரீதியாகச் செல்லக்கூடியவகையில் இச் சபைகளுக்கு அதிகாரம் வழங்குவதற்கு நீதிஅமைச்சு தீர்மானித்துள்ளதாக அறியப்படுகிறது.

இதுவரைகாலமும் மக்களால் நிறுவப்பட்ட இச் சபைகள் இருதரப்பினரும் ஒப்புக்கொண்டால்தான் தீர்ப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்டு வந்தது. ஆனல் இந்த நிலையை மாற்றி இனி இச்சபைகள் வழங்கும் தீர்ப்பு செல்லுபடியாகக் கூடியதாக புதிய ஏற்பாடுகள் வகைசெய்யுமென நம்பப்படுகிறது.

வட பகுதியில் சிறப்பான முறையில் கடந்த மூன்று ஆண்டுகளாகச் செயல்பட்டு வரும் அளவெட்டிசமாதான சபையின் முன்மாதிரியைப் பின்பற்றி மல்லாகத்திலும் சமாதான சபை நிறுவப்பட்டுள்ளது.

குப்பிளான், பளை, வீமன்காமம், மயிலிட்டி ஆகிய இடங்களிலும் இத்தகைய சமாதான சபைகள் செயல்பட்டு வருகின்றன.

இத்தகைய தராதரம் பெற்ற சமாதான சபைகளுக்கு இதுவரை பொது மக்களே உறுப்பினர்களைத் தெரிவுசெய்து வந்தனர். புதிய ஏற்பாட்டின்படி ஒவ்வொரு காரியாதிகாரியும் தமது பிரிவில் தகுதியுள்ளோர்களைச் சிபாரிசு செய்வார் என அறியப்படுகிறது. நீதி அமைச்சரின் அங்கீகாரம் பெற்றபின் இவர்கள் சமாதான சபையில் அங்கம் வகிக்கும் தகுதியைப் பெறுவர்.

## சனசமூகநிலைய தீர்மானங்கள்

ஊர்காவற்றுறை, ஞாயிறு

சரவணை சனசமூக நிலையத்தின் பொதுக்கூட்டம் திரு. வி. பொன்னுத்துரை தலைமையில் நடைபெற்றது,

நிலைய வளர்ச்சி கருதி அங்கத்தவர்கள் ஊக்கமாக உழைக்கவேண்டுமெனவும், சிறப்பாக மாணவ இளைஞர்கள் ஆதரவு நல்கவேண்டுமெனவும் தலைவர் கேட்டுக்கொண்டார்.

சரவணைக் கிராமத்தில் சிறுபான்மைத் தமிழர் வாழும் பகுதியில் ஓர்நெசவு நிலையத்தை அமைத்துத் தரும்படி தீவுப்பகுதி எம். பி. யைக்கேட்டுக் கொள்ளும்தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

ஊர்காவற்றுறை அரசினர் ஆஸ்பத்திரிக்கு 'டி.எம்.ஏ.' டாக்டரை உடனடியாக நியமிக்கவேண்டுமெனவும் ஓ. பி. டி. மண்டபத்தைப் புதிதாக அமைத்துத் தரவேண்டுமெனவும் சுகாதார அமைச்சரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம்நிறைவேற்றப்பட்டது.

பின்வருபவர்கள் புதியநிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்:—

தலைவர்: திரு. வி. பொன்னுத்துரை உபதலைவர்கள்: திரு. ம. கந்தசாமி (ஆசிரியர்) திரு. செ. சுப்பிரமணியம், பொதுக்காரியதிரிசி: திரு. கு. பத்மநாதன், தனதிகாரி: திரு. க. இ. கந்தையா. விளையாட்டுப் பகுதிக் காரியதரிசியாக் செல்வன் மு. சோமசுந்தரமும், வாசிகசாலைப் பொறுப்பாளராக திரு. க. இ. கந்தையாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

## நாஸர் கொலை முயற்சி

கெய்ரோ, மே 1

எகிப்திய ஜனாதிபதி நாஸரைக்கொலைசெய்ய முயன்றதாக மேலும் 50 முஸ்லிம் சகோரத்துவ [illegible] பனத் [illegible] விசாரணை நடைபெறுகிறது. [illegible] விசாரணைகள் நடைபெறு[illegible]றன

## வாலிப முன்னணி கிளை நிர்வாகிகள்

வல்வெட்டித்துறை, சனி

பருத்தித்துறை அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணி கிளையின் அங்குரார்ப்பணக் கூட்டம் திரு. நடராசா தலைமையில் அண்மையில் நடைபெற்றது. கூட்ட ஆரம்பத்தில் திருக்கோணமலையில் கடமையாற்றி அகால மரணமடைந்த காரியாதிகாரி திரு. ஜே. டி. ஆர்னல்டுக்கு அனுதாபம் தெரிவித்து 2 நிமிட நேரம் மௌனம் சாதிக்கப்பட்டது.

புதுவருட உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள்: திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கியூ. ஸி, திரு. என். நடராசா, தலைவர்: திரு. வி. பி சுந்தரலிங்கம், உபதலைவர்; திரு. நடராசா, பொருளாளர்: திரு. வே. நாகநாதன். மற்றும் நிர்வாகசபை அங்கத்தவர்களாக 25 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

## ஞாபகார்த்தம்

சங்கரத்தை, ஞாயிறு

சங்கரத்தை இந்துவாலிபர்சங்கம், கிராமமுன்னேற்றச் சங்கம், சனசமூகநிலையம் ஆகியவற்றின் உறுப்பினராக இருந்தவரும் சமூக சேவையாளராக இருந்தவருமான திரு. கமலநாதனின் பிரிவுகுறித்து ஞாபகார்த்தக்கூட்டம் ஒன்று வருகிற செவ்வாய்க்கிழமை டாக்டர் ஜி. செல்வத்துரை தலைமையில் நடைபெறவிருக்கிறது. அன்று திரு. கமலநாதனின் உருவப்படத்தைத் திரு. வி. சத்தியநாதன் திரைநீக்கம்செய்து வைப்பார்.

## 20,000 பேர்

டாஷ்கண்ட், மே 1

டாஷ்கண்ட் பூகம்பம் காரணமாக வீடிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 20,000 பேர் என அறிவிக்கப்பட்டது.


## விளம்பரம்

**JAFFNA ACADEMY**
**Chundicully**

New term commences on 6-5-66

Admission cards for present students & new admissions on 6th & 7th May 66.

Lectures from 9-5-66

Following courses will be provided:

1. G. C. E (OrdLevel) Arts & Science.
2. G. C. E. (Adv. Leve & U. E.) Science. 1966.
3. G. C. E. (Adv Level. & U. E.) Science 1967
4. Electrical Engineering Practice (City & Guild's) Preliminery.
5. Electrical Engineering Practice Intermediate.
6. Electrical Engineering Practice Final.
7. Surveying & Levelling (Licence Surveyor's Exam)
8. Draughtmanship & Building Construction. (Authorized drughtman's) & City & Guild's examination)
9. Evening classes in Sinhalese for students and others can be arranged.

115 Director.


## வேலையிழந்தோர் கழக தீர்மானம்

யாழ்ப்பாணம், திங்

தனிச் சிங்களச் சட்டத்தால் வேலையிழந்தோர்கழக நிர்வாகச்சபையின் அவசர கூட்டம் சென்ற வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வர்த்தகக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றபோது கழக உறுப்பினர்கள் தமது பெயர், முகவரி, சேவை விபரங்கள், வயது ஆகியவற்றை உடனடியாக கழகச் செயலாளருக்கு அனுப்பி வைக்குமாறு கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.


## வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் பஞ்சரத திருப்பணி நிதி



நன்கொடையை வழங்கினீர்களா வண்ணை வைத்தீஸ்வரன் பஞ்சரதத் திருப்பணிக்கு?
இன்றேல் இன்றே நன்கொடை வழங்கி ஊக்குவித்தல் அடியார் கடமையாகும்.

தனதிகாரி,
தேர்த் திருப்பணிச்சபை,
தேவஸ்தான காரியாலயம்,
வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்,
வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்.

கோயில் தேவைகளுக்கும் விவாகம் முதலிய விசேஷ வைபவங்களுக்கும் உபயோகமான

# அபிஷேக சந்தனம்

கோயில் அபிஷேக திரவியங்கள்,
வாசனை மிக்க பன்னீர்
பரிமளம் நிறைந்த சந்தன வில்லைகள்

கிடைக்குமிடம்:

**சுந்தரம் பிறதர்ஸ்**

(மருந்துச்சரக்கு வியாபாரம்)

73, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பீகிங், மாஸ்கோவில் பிரமமாண்ட மேதின அணிவகுப்புகள்

## ரஷ்யா, அமெரிக்கா மீது சீனப் பிரதமர் கண்டனம்

### வடவியட்னும் உயரே ஆளில்லா உளவு விமானம் சுடப்பட்டது

பீகிங், மே 1

இன்று பீகிங்கிலும், மாஸ்கோவிலும் பிரம்மாண்டமான மேதினக் கூட்டங்களும், ஊர்வலங்களும் நடைபெற்றன.

பீகிங் மேதின அணிவகுப்புக்களில் அல்பேனியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் உட்பட பல தூதுகோஷ்டிகள் பங்கு பற்றின.

பிரதம மந்திரி திரு. சூ-என்-லாய் அப்போது பேசுகையில், ரஷ்யத் தலைவர்கள் அமெரிக்காவுடன் சேர்ந்துகொண்டு சீனவைச் சுற்றிவளைக்க முயல்வதாயும், இவ்விஷயத்தில் ரஷ்யா மோசமான கூட்டைப் பின்பற்றி வருவதாயும் குற்றஞ்சாட்டினர்.

மாஸ்கோவில் நடைபெற்ற 23-வது காங்கிரஸ் மகாநாட்டில் பெரியபிரச்னைகள் தவிர்க்கப்பட்டதிலிருந்தே ரஷ்யத் தலைவர்கள் எரிமலை வாயிலில் உட்கார்ந்திருப்பது தெரிகிறது என்றும் அவர் கூறினர்.

அமெரிக்கா இந்தோ-சீனவிலும், சீனவிலும் யுத்தத்தை விஸ்தரிக்க முயன்று வருவதாயும், இந்த நிலை ஏற்படுத்தப்படுமானல் அதற்கு மோசமான தோல்வி ஏற்படும் என்றும் அவர் எச்சரித்தார். ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகளுடன் சேர்ந்துகொண்டு சீனவுக்கெதிரான நடவடிக்கையில் அமெரிக்கா ஈடுபட்டிருப்பதாயும் சூ கூறினர்.

வியட்னும் யுத்தம் விஸ்தரிக்கப்பட்டால் சீன வடவியட்னுமுக்கு முழு உதவி அளிக்கும் என்றும் சீனப் பிரதமர் குறிப்பிட்டார். அமெரிக்காவின் வியட்னும் சமாதான யோசனை ஒரு ஏமாற்று என்றும் அவர் வருணித்தார்.

#### பல வானச்சண்டைகள்

இதற்கிடையில் வடவியட்னுமுக்கு உயரே மேலும் பல வானச்சண்டைகள் நடைபெற்றிருக்கின்றன.

அமெரிக்க விமானம் ஒன்று, ஒரு ரஷ்ய ரகமிக் 7 விமானத்தைச் சுட்டு வீழ்த்தியதாய் அறிவிக்கப்பட்டது. கடந்த வாரத்தில் மொத்தம் 6 மிக் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டனவாம். அதே சமயம் நேற்று 8 அமெரிக்க வெடிகுண்டு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாயும் இதுவரை மொத்தம் 1005 அமெரிக்க விமானங்கள் சுடப்பட்டிருப்பதாயும் வடவியட்னும் செய்தி ஒன்று கூறுகிறது.

#### உளவு விமானம் சுடப்பட்டது

விமானி இல்லாத அமெரிக்கா உளவு விமானம் ஒன்று நேற்று சுடப்பட்டதாயும் இதுவரை மொத்தம் 19 ஆளில்லா உளவு விமானங்கள் சுடப்பட்டதாயும் அது மேலும் கூறியது.

வடவியட்னுமுக்கு ராணுவ உதவி அளிக்கும் ஒப்பந்தம் ஒன்றில் அல்பேனியா நேற்று கைச்சாத்திட்டது.

## லுஸாகாவில் பிரிட்டிஷ் தூதராலயம் மீது தாக்குதல்

### ரொடீஷிய சம்பவத்தின் எதிரொலி

லுஸாகா, மே 1

ஸாம்பியா தலைநகர் லுஸாகாவில் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று பிரிட்டிஷ் தூதராலயத்தை தாக்கி, ஜன்னல்களை உடைத்தெறிந்தனர். பிரிட்டிஷ் கொடி கிழித்தெறியப்பட்டது.

ரொடீஷியாவில் 7 ஆபிரிக்கர் கொல்லப்பட்டது சம்பந்தமாகவும், ரொடீஷியா பற்றிய பிரிட்டிஷ் கொள்கையை எதிர்த்தும் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து 100 பேர் கைது செய்யப்பட்டு 99 பேர் பின்பு விடுதலை செய்யப்பட்டனர்.

இதற்கிடையில் ரொடீஷியாவுடன் பேச்சுநடத்த பிரிட்டன் முன்வந்திருப்பது குறித்து திரு. வில்சன்மீது ஸாம்பியா அதிபர் கண்டனம் தெரிவித்தார்.

அவர் ஒரு கூட்டத்தில் பேசியபோது, ஆபிரிக்க தேசியவாதிகள்ரொடீஷியாவில் தங்கள் விடுதலைப் போராட்டத்தை தொடர்ந்து நடத்துவார்கள் என்றும் கூறினர்.

7 ஆபிரிக்க தேசிய வாதிகள் கொல்லப்பட்டது குறித்து திரு. கவுண்டா 1 நிமிட மௌனம் அனுஷ்டித்தார்.

ஸிம்பாவே ஆபிரிக்க தேசியயூனியன்கட்சி நேற்று விடுத்துள்ள ஒரு அறிக்கையில், ரொடீஷியாவில் சமீப துப்பாக்கிச் சண்டையின் போது 25 வெள்ளை பொலிஸார் கொல்லப்பட்டதையும், 32 பேர் காயமடைந்ததாயும், 2 பொலிஸ் ஹெலிகோப்டர்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாயும் கூறப்பட்டுள்ளது.

## கோபாலன் பேசுகிறர்

புதுடில்லி, மே 1

கொழும்பு யோசனை பற்றி பேச்சு நடத்தவருமாறு சீன அழைக்கப்படவேண்டும்என விடுதலைபெற்றதிரு ஏ கே கோபாலன்கூறினர். டாஷ்கண்ட் உடன்பாட்டு நெறிகளுக்குஇதுதான்ஏற்றதென்றும் இந்திய எல்லையில் சீனப் படைகள் இருப்பதைவிட, தற்போதைய நாட்டின் பொருளாதார நிலைமையே பேரபாயம் என்றும் அவர் கூறினர்

இந்தோனேஷியாவில்

## சுகர்ணே எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

ஜாகர்த்தா, மே 1

டாக்டர் சுகர்ணே ஆயுட்கால ஜனதிபதியாக இருப்பதை எதிர்த்து நேற்று ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றதாயும், இதுதான் அவருக்கெதிராகநேரடியாக நடைபெற்ற பெரிய கண்டனம் என்றும் அறிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் இந்தோனேஷியாவிலுள்ள 10பெரிய தொழிற்சங்கங்கள் சீனவுடனன சகல உறவுகளையும் முறித்துக்கொள்ளும்படி தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருக்கின்றன.

## 'விஸி' நினைவுமலர்

புதுடில்லி, மே 1

காலஞ்சென்ற விஜயநகர மகராஜ்குமார் கிரிக்கெட் துறையில் ஆற்றிய சேவையைப் பாராட்டுமுகமாக நினைவுமலர் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. ஜனதிபதி ராதாகிருஷ்ணன் இந்த மலரை அன்னை மகாராணியிடம் நேற்று வழங்கினர்

## மீஸோக்கள் பயமுறுத்தல்

புதுடில்லி, மே 1

தீவிர மீஸோ மலைவாசிகள்சிறு சிறு கோஷ்டிகளாக ஆயுதங்களுடன் உட்கிராமங்களில் பிரவேசித்து மக்களைப் பயமுறுத்திவருவதாயும், வரிப்பணம் கேட்டுவருவதாயும் தகவல்கிடைத்திருக்கிறது. சமீபத்தில் அவர்கள் சில கிராமங்களுக்குத் தீவைத்ததாகச் சொல்லப்படுகிறது.

## நேரு நினைவு

சென்னை, மே 1

சென்னையில் நேரு நினைவாக குழந்தைகள் நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்படவிருக்கிறது. [illegible] நேரு நினைவு நிதி ரூ. 150 லட்சம் வசூலிக்கப்படும்.

## "யாழ்ப்பாண முன்னேற்றத்துக்கு நிதிசேர்த்து உதவுவேன்"

### நடிகர் எஸ். எஸ். ஆர். அறிவிப்பு

யாழ்ப்பாணம், திங்.

"மூச்சும் பேச்சும் தமிழெனக்கொண்டு வாழும் யாழ்ப்பாணத்தின் முன்னேற்றத்திற்காக எதையுமே செய்து தரச் சித்தமாக இருக்கிறேன். அங்குள்ள எனதுசக கலைஞர்களை இங்கு அழைத்துவந்து விரைவில் இங்கு நிகழ்ச்சிகள் நடத்தி நிதி சேர்த்துத் தருவேன். தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவர் என்ற முறையில் இதை நான் உறுதியிட்டுத் தெரிவித்துக்கொள்கிறேன்!"

யாழ்ப்பாணம் ஸ்ரேடியத்தில் நேற்று முன்தினமிரவு தென்னிந்திய பிரபல நடிகரும், தமிழ்நாட்டு சட்டசபை உறுப்பினருமான திரு. எஸ். எஸ். ராஜேந்திரன் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். முஸ்லிம் கலாச்சார மன்றத்திற்காக நடிகர் ராஜேந்திரனின் 'கண்ணகி கதை' வில்லுப்பாட்டு நடைபெற்றது. இதனையடுத்து பேசுகையிலேயே எஸ்.எஸ். ஆர். இப்படியாகக் கூறினர். நிகழ்ச்சிகளுக்கு யாழ். மேயர் அல்பிரட் துரையப்பா தலைமைதாங்கினர்.

நடிகர் ராஜேந்திரன் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

"நான் தமிழக சட்டமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டது எனது தனிப்பட்ட செல்வாக்கினலல்ல. நான் சார்ந்திருக்கும் திராவிட முன்னேற்றக்கழகமே என்னைத் தெரிவுசெய்தது. என் உள்ளத்திலிருந்து வெளிப்படும் கருத்துக்களெல்லாம் அறிஞர் அண்ணுவின் பொன்னன கருத்துக்களே. அவரின் தூதுவராகவே இங்கு வந்தேன். இந்த இடத்தில் அறிஞர் அண்ணு அடிக்கடி சொல்லும் ஒரு கருத்தையும் தெரிவிக்க விரும்புகிறேன். தமிழ ஒருவன் எந்த நாட்டில் பிறந்து வாழ்ந்து வருகிருனே, அதையே தனது தாய்நாடாகப்போற்றிப் பேணவேண்டும். அந்த நாட்டிற்காகவே தன்னைத் தியாகம்செய்யவேண்டும்."

நடிகர் எஸ், எஸ். ஆரின் துணைவியார் விஜயகுமாரி பேசுகையில், தனது கருத்துக்களை கணவரே சொல்லிவிட்டாரென்றும், விரைவில் இன்னும் ஒருமுறை யாழ்ப்பாணம் வந்து நிதிசேர்த்துத் தருவோம் என்றும் சொன்னர்.

மேயர் அல்பிரட் துரையப்பா தமது உரையில், யாழ்ப்பாணத்தில் நீச்சல் தடாகம் ஒன்றை அமைப்பதற்கு நிதி சேர்ப்பதற்காக இன்னுமொருமுறை யாழ்ப்பாணம் வந்துபோகவேண்டுமென்று நடிகர் எஸ். எஸ். ஆரைக் கேட்டுக்கொண்டார்;

## பெருமழை

சென்னை, மே 1

தமிழ்நாட்டில் பெருமழை கடுங்காற்றுக் காரணமாக நேற்று விமான சேவைகள் பாதித்தன.

## ஜப்பானிய உதவித்திட்டம்

டோக்கியோ, மே 1

பின்தங்கிய நாடுகளுக்கு பொருளாதார உதவியளிக்கும் ஐந்தாண்டுத் திட்டம் ஒன்றை ஜப்பான் வெளியிட்டிருக்கிறது.

## ஜப்பானிய வைத்திய குழு

டோக்கியோ, மே 1

ஜப்பானிய வைத்தியக் குழு ஒன்று 22 நாடுகளுக்கு அனுப்பப்படவிருக்கிறது.

## பூட்டான் மன்னர்

புதுடில்லி, மே 1

இன்று தாயகம் புறப்பட விருப்த பூட்டான் மன்னர், இந்தியத் தலைவர்களுடன் மேலும்பேச்சு நடத்தும் பொருட்டு தமது பிரயாணத்தை ஒத்திவைத்திருக்கிறர்.

## ரயில் கவிழ்ந்து 26 பேர் காயம்

புதுடில்லி மே 1

வட கிழக்கு ரயில்வேயில் கௌஹாட்டியிலிருந்து 14 மைல் தூரத்தில் ரயில் ஒன்று தடம்புரண்டதால் 26 பேர் காயமடைந்தனர். 4 பெட்டிகள் கவிழ்ந்தன

## வான வெளியில் ஆதி நாகரிகம்

மாஸ்கோ, மே. 1

பூமிக்கு வெகு தூரத்துக்கப்பால் இருக்கும் ஏதாவதுஒரு கிரகத்தில் ஆதிநாகரிகம் வாய்ந்த ஒரு உயிரினம் இருக்கக்கூடும் என்றும், பூமியுடன் அவர்கள் தொடர்புகொள்ளக்கூடும் என்பதற்கு சான்று இருப்பதாயும் ரஷ்ய விஞ்ஞானிகள் 8 பேர் அறிவித்திருக்கிறர்கள்.

அதிசயமான ஒலிக் குறிப்புக்கள் பூமிக்கு கேட்கிறதென பல மேற்கு விஞ்ஞானிகளும் கூறியிருக்கின்றனர்,

## 2 இஸ்ரேல் வீரர் பலி

டமாஸ்கஸ், மே 1

சிரியா—இஸ்ரேல் எல்லையில் நடைபெற்ற கைகலப்புக்காரணமாக 2 இஸ்ரேல் வீரர்கள் காயமடைந்ததாயும், 2 பேர் கொல்லப்பட்டதாயும் அறிவிக்கப்பட்டது.

## ரயில் விபத்து மூவர் பலி

கல்கத்தா, மே. 1

கிழக்கு ரயில்வேயில் நேற்று ரயிலொன்று மின்சார ரயிலுடன் மோதியதால் மூவர் மாண்டனர் இதுசம்பந்தமாகப் புலன் விசாரணை நடைபெற்று வருகிறது.

## அங்கோலாவுக்கு புதிய துருப்புகள்

லிஸ்பன், மே 1

அங்கோலாவுக்கும், மொஸாம்பிக்குக்கும்புதிதாக 1600 போர்த்துக்கேய துருப்புகள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

## சீனவில் பாக். கோஷ்டி

ராவல்பிண்டி, மே 1

சீனவில் நடைபெறும் மேதின வைபவத்தில் ஐவர் அடங்கிய பாகிஸ்தான் தூதுகோஷ்டி கலந்துகொண்டது

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

தொழிலாளர், போதிய ஊதியத்துக்காகவும், உரிமைகளுக்காகவும்போராடும் அதேசமயத்தில், அவர்கள் தங்களது பொறுப்புகளையும்கடமையையும் உணர்ந்து, உண்மையாக உழைத்து, தொழிலை அபிவிருத்தி செய்யவேண்டிய அவசியத்தையும் உணர வேண்டும். —மகாத்மா காந்தி


# ஈழநாடு

EELA NADU, National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 319

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு சித்திரை மீ 19உ (2-5-66)


## நாடற்ற தொழிலாளர்

இலங்கையிலே அரசியல் உரிமை மறுக்கப்பட்டுவரும் தொழிலாளர் லட்சக்கணக்கிலே மலைநாட்டில்வசிக்கின்றனர்கள். பத்துலட்சம் தொழிலாளருக்குத் திடீரென பிரஜா உரிமை ரத்து செய்யப்பட்டதால், அவர்களது பிரதிநிதிகள் சுமார் 10 வருடங்களுக்கு மேல் இலங்கை பார்லிமெண்ட் சபையிலே அங்கம் வகிக்க முடியாமல் இருக்கிறது. இது ஜனநாயக தர்மத்துக்கு மாறுவதுடன் சர்வதேச தொழிலாளர் சட்டப்படி அவர்களது உரிமையை மறுப்பதுமாகும்.

மேதினம் எனப்படும் தொழிலாளர் உரிமை விழாவிலே மலைநாடு உள்ளிட்டு பலபல இடங்களிலும் கூட்டங்கள் போட்டாபோட்டி முறையில் நடக்கின்றன. மலைநாட்டு தொழிலாளருக்காகவும் பல ஸ்தாபனங்கள் உள்ளன. என்றாலும் இலங்கையிலேஅரசியல் உரிமை பறிக்கப்பட்டுள்ள பல லட்சம் தொழிலாளருக்கு அடிப்படை நீதி வழங்கவும் அவர்களது இழந்த உரிமைகளை மீண்டும் அளிக்கவும் எவ்விதமுயற்சியும் நடப்பதாகக் காணோம். துரதிருஷ்டசாலிகளான அம் மக்களுக்கு பிரஜா உரிமையும் வாக்குரிமையும் மறுத்துவரும்வரை, இங்கு ஜனநாயகம் பலப்படவோ நாட்டில் அமைதி நிலவவோ முடியாது.

ஸ்ரீமா—சாஸ்திரி ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதால் அது நிறைவேறியதும் இப்பிரச்னை தானுகத் தீர்ந்துவிடுமென்று மதிக்கப்படலாம் ஆனல் அந்த ஒப்பந்தம் எப்படி எப்போது நிறைவேறப்போகிறதென்பது தெரியவில்லை. மலைநாட்டிலுள்ள நாடற்ற தொழிலாளரில் பலர் தாங்களாகவே இந்தியா திரும்பி விட ஆவல் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. அப்படிதாங்களாகவே இஷ்டப்பட்டுச் செல்லுகிறவர்களை, இந்தியா உடனடியாக ஏற்று பிரஜா உரிமையும், புனர்வாழ்க்கைக்கான வசதிகளையும் தாராள மனதுடன் வழங்கவேண்டும். அப்படி தாங்களாகச் செல்ல இஷ்டப்படாதவரை கட்டாயமாக நாடு கடத்தப் போகுறார்களா? அவர்களதுநிலைமைஎன்ன என்பது முக்கிய கேள்வி. இது பாட்டாளிமக்களின் அடிப்படை உரிமையைப் பற்றிய விஷயமாதலால், மேதினத்தைக் கொண்டாடும் எல்லா தொழிற்சங்கங்களும், இவ்விஷயத்திலே, அரசியல் உரிமை பறிக்கப்பட்டுள்ள அத் தொழிலாளர் பால் அனுதாபமும் ஆதரவும் காட்டக் கடமைப்பட்டிருக்கிறுர்கள். உலகத் தொழிலாளரிடையே, நாடு, மொழி, மதம், சாதி முதலியவேற்றுமை காட்டப்படக்கூடாதென்றும், தொழிலாளரனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவரென்பதும் மேதினத்தின் அடிப்படைக் கொள்கைஎன்பதைஞாபகப் படுத்ததேவையில்லை.

மலைநாட்டிலுள்ள நாடற்ற தொழிலாளர் இஷ்டப்பட்டால் வடக்கு, கிழக்கு மாகாணங்ளில் குடியேறலாமென்று ஸ்தல ஸ்தாபன அமைச்சர் ஒரு கூட்டத்தில் கூறியதைப்பற்றி அப்பகுதியில் சில கருத்துவேறுமைகளும் கசப்புகளும் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. அவர்களுக்கு இலங்கைப் பிரஜாஉரிமை வழங்கி, இஷ்டப்பட்டவர்களை வடக்கிலோ கிழக்கிலோ குடியேற்றி நிலம் முதலியவைகளைக் கொடுப்பதாயின் அதில் எவ்வித தவறுமிருப்பதாகத் தெரியவில்லை. பிரஜா உரிமை அளிக்காமல் அவர்களை இலங்கையின் வேறு பகுதிகளில் குடியேற்றினுல், அங்கும் அவர்களுக்கு பல சங்கடம் ஏற்படலாம். லட்சக் கணக்கான தொழிலாளருக்கு, வருடக்கணக்காக அரசியல், பிரஜா உரிமையை எக்காரணம் பற்றியும் நீடித்து மறுத்துவருவது, அவர்களுக்குச் செய்யும் பெரும் பாவமாகும். அரசியல், மொழி முதலிய பல அடிப்படை உரிமைகளை அவர்களுக்குக் கூடிய சீக்கிரம் வழங்கப்பட மே தினம் கொண்டாடிய எல்லா தொழிற்சங்கங்கள் மட்டுமன்றி இரு தேச அரசாங்கங்களும் கூடிய முயற்சிகளைச் செய்வது அவர்களது முக்கிய கடமையும் பொறுப்புமாகும்.

## திருவள்ளுவர் விழா

இமையாணன், ஞாயிறு கருணையம்பதி இளைஞர் முன்னேற்றக்கழகத்தினர் வழமைபோல் இம்முறையும் வெகு சிறப்பாக திருவள்ளுவர் விழா வைக் கொண்டாட இருக்கின்றனர். ஆனி மாதம் 4-ந் திகதியும்5-ந் திகதியும் கரணவாய் உபதபாற்கந்தோருக்கு அருகாமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் விசேடமாக இந்தியப் பேரறிஞர்கள் பங்கு கொள்வார்கள். இவ்விழாவில்பேச்சு, நடன, நாடகப்போட்டிகள் நடைபெறும் எனவும், நாடகத்திலும் பேச்சிலும் முதலிடம் பெறும் பாடசாலைகளுக்கு தங்கப்பதக்கங்கள் பரிசாக வழங்கப்படும் எனவும் தெரியவருகிறது.

## இன்று

இன்று மாலை வட்டுக்கோட்டை அடைக்கலந்தோட்ட கந்தசுவாமியார் கோயில் எட்டாந் திருவிழா உற்சவத்தில் ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா 'கந்தரநுபூதி' என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்துவார். திரு. நா. விஜயபாஸ்கரனின் தோத்திர [illegible] ணமும் இடம்பெறும்.

கைதடி விநாயகர் ஆலயம்

## இன்று சங்காபிஷேகம்

இலங்கையிலுள்ள விநாயகர் ஆலயங்களுள் கைதடி விநாயகர் ஆலயம் பழம் பெருமை வாய்ந்ததும் புதுமையுடையதுமாகும். இவ்வாலயம் யாழ்ப்பாணத்திலிருந்து ஆறுமைல்தொலைவில் உள்ள கைதடிக்கிராமத்தில் அமைந்துள்ளது. கைதடியில் கண்டிவீதிக் கருகாமையில் உள்ள இடத்தில் (இயத்தை என அழைப்பார்கள்) முன்பு கிணறு ஒன்று வெட்டும்போது ஒரு விநாயகர்விக்கிரகம் தென்பட்டது. அவ்விக்கிரகத்தை விநாயகரது விக்கிரகம் என அறியாது கிணறு வெட்டியவரில் ஒருவர் அதன் கையைக் கல்லென எண்ணி தறித்தனர். அப்போது தறித்த இடத்திலிருந்து இரத்தம் பெருகியது. இதன் காரணத்தை அறியாது பலர் ஏங்கினுர்கள். அன்றிரவு விநாயகர் தறித்தவரிடம் கனவில் சென்று இங்குள்ள மக்கள் கடவுள் வழிபாடு சமயபக்தி முதலியன இல்லாது இருக்கின்றனர். இந்த விக்கிரகத்தை எடுத்துக் கோவில் கட்டி பூசைசெய்து நற்கதியடையுமாறு பணித்தார். இதனை இங்குள்ளவர்களிடம் கூறியபோதுநேரிலேசென்று உண்மையை உணர்ந்து விநாயகர் ஆலயத்தைக் கட்டினுர்கள். விக்கிரகத்தின் கையைக் கல்லெனநினைத்துதறித்ததனுல் 'கைதறிப் பிள்ளையார்' என முன்பு அழைக்கப்பெற்று நாளடைவில் கைதறி கைதடியாக மாறியதென பெரியோர்கள் கூறுவர். இவ்வாலயத்தின் காலம் போர்த்துக்கேயர் இலங்கையிலிருந்து அரசாட்சிசெய்த காலமெனக் கூறுகின்றனர்.

இவ்வருட உற்சவம் சென்ற 25ம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றுவிழாவுடன் ஆரம்பமாகி எல்லாத் திருவிழாக்களும் சிறப்பாக நடைபெற்று புதன்கிழமை தேர் தீர்த்த உற்சவத்துடன் முடிவடைகின்றது. முதலாந்திருவிழா தொடக்கம் பத்துத் திருவிழாக்களிலும் மாலையில் கதாப்பிரசங்கம் நடைபெறுகின்றது. அருட்கவி சி. விநாசித்தம்பி இப்பிரசங்கங்களை பொறுப்பேற்று நடத்திவருகின்றுர். தேர் தீர்த்தத் திருவிழாவன்று கைதடி இந்துவாலிபர்சங்கத்தினர் ஒரு பஜனையாத்திரையை நடத்தவிருக்கிறுர்கள். இங்குள்ள தேர் பல சிற்ப ஓவியங்களைக் கொண்டதாக விளங்குகின்றது. இத்தேர்த்திருவிழாவைக் கைதடி மணியகாரன் பரம்பரையில் வந்தவர்கள் சிறப்பாக நடத்துகிறுர்கள். பல அன்பர்கள்காவடி எடுத்தும்தங்கள் நேர்த்திக்கடனை நிறைவேற்றுவார்கள்.

இவ்வாலயம் சைவத்திரு அம்பிகைபாகனின் உறவினர்களால் செவ்வனே பரிபாலிக்கப்பெற்று வருகிறது நித்திய நைமித்தியக் கிரியைகள் வழுவின்றி குறித்த நேரத்தில் நடைபெறவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

— ஆ. கந்தையா

## வடபகுதி கல்வி இலாகா பதவிகள்: பார்லிமெண்டில் எம். பி. கேட்பார்!

வவனியா, ஞாயிறு

வவனியா எம்.பி.திரு.தா சிவசிதம்பரம் பின்வரும் கேள்விகளை பார்லிமெண்டில் கேட்பதற்காக முன்னறிவித்தல்கொடுத்துள்ளார்.

வடமாகாணத்திலுள்ள உதவிவித்தியாதிபதிகாரியாலயத்தில் 1964-ம் ஆண்டு தொடக்கம் வித்தியாதிபதியின் பதவியும், 1965-ம் ஆண்டுதொடக்கம் பரிசோதகர் பதவியும், உதவி நிர்வாக ஆணையாளர்பதவியும் இல்லாது மேற்படி காரியாலயம் இயங்கி வருகிறதென்பதையும்மந்திரி அறிவாரா?

வடமாகாண கல்வியின் நலம் முன்னிட்டும் சிறந்த நிர்வாகத்தை மனதில் கொண்டும் வேண்டியஉத்தியோகத்தர்களை விரைவில் நியமிக்க கல்வி மந்திரி நடவடிக்கைமேற்கொள்வாரா? அப்படியாயின் எப்போது மேற்கொள்ளப்படும்.

## 'நாவலர் கருத்துக்களை பரப்ப இளைஞர்கள் முயலவேண்டும்'

யாழ்ப்பாணம், ஞாயிறு

''இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது கடவுளை வழிபட்டு முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்'' என்பது நாவலர் பெருமானின் அமிர்த வாக்காகும். அந்த உத்தமம் பெரியாரின் இலட்சியங்களைக் கைக்கொண்டு ஒழுகிவருவதுடன், ஏனைய கிராமச் சூழல்களிலும், சைவக்கோயிற்றிருவிழாக் காலங்களிலும் ஆங்காங்கு சென்று அவ்வப்போது நாவலர்பெருமானுடைய நனி சிறந்த எண்ணக் கருத்துக்களை எடுத்துப்பரப்பி சிறந்ததொண்டு செய்து வருவதில் இக்கிராமத்து இளைஞர்கள், வாலிபர்கள்,பெரியவர்கள் நெடுங்காலம் உழைத்துவருவதை யான் மிக உன்னிப்பாகக் கவனித்து வந்துள்ளேன். இத்தகைய தொண்டுகளில் ஈடுபட்டு உழைக்கும் உங்களெல்லோரையும் வாழ்த்துகிறேன். உங்கள் சைவத் தொண்டு வாழ்க. இவ்வாறு நாயன்மார்கட்டு சைவசமய அபிவிருத்திக்கழகத்தின் ஆதரவில் நாயன்மார்கட்டு ஸ்ரீ இராசராசேஸ்வரியம்பாள் ஆலயத்தில் நடைபெற்றுவரும் பெரியபுராணப் பிரசங்கத்தின் 45-வது தொடரில் விரிவுரையாற்றும்போது சிவஸ்ரீ சிவபாதசுந்தரக்குருக்கள் குறிப்பிட்டார். தொடர்ந்து [illegible] வேளையில் குறிப்பிட்டதாவது:—

நால்வர்நெறியையும் நாவலர் நெறியையும் இக்கழகத்தினர் போற்றி வளர்த்து வருவது மகிழ்ச்சிக்குரிய ஒன்றுவதோடு இக்கிராமத்துக்கு நாயன்மார்கட்டு என்னும் பெயர் அமைந்திருப்பதும் பொருத்தமானதே எனக் குறிப்பிட்டுவிட்டு இக்கழகத்தினர் திருக்கோயிலில் செய்யும் திருத்தொண்டும் பிரசாரமும் சைவத்திருநாடெங்கணும் பரவச் செய்யவேண்டும் என்றுர்.

## ஆசிய இளைஞர் உதைபந்தாட்டம்

மாஸ்கோ, மே 1

8-வது ஆசிய இளைஞர் உதைபந்தாட்ட விளையாட்டுப் போட்டிகளை பிலிப்பைன்ஸ் அதிபர் மார்கோஸ் நேற்று ஆரம்பித்து வைத்தார்.

பிலிப்பைன்சுக்கும் மலேசியாவுக்குமிடையே நடைபெற்ற முதலாவது போட்டியில் மலேசியா 3-0 கோல்களால் வெற்றிபெற்றது.

பர்மாவுக்கும் சிங்கப்பூருக்குமிடையே நடைபெற்ற போட்டியில் 8—0 கோல்களால் பர்மா வென்றது

இலங்கைஉட்பட 12 நாடுகள் இப்போட்டியில் கலந்துகொண்டன

## ஐயாறன் எழுதுகிறது

கிளிநொச்சியிலிருந்து ஓர் 'அர்ஜண்ட்' அழைப்புக் கிடைத்தது. இரணைமடுக் கரைமீது கோவில் கொண்டுள்ள ஸ்ரீ கனகாம்பிகை அம்மன் வருடாந்த பவனி வருவதாயும் பல இடங்களுக்கும் செல்வதாயும், வந்து தரிசிக்குமாறும் உத்தரவிட்டிருந்தார். உடன் புறப்பட்டேன்.

யாழ்ப்பாணத்திலிருந்து நான்கு வருடங்களுக்கு முன்பாக யோகர் சுவாமிகளின் கட்டளைக்கிணங்க, இந்த அம்மனை இரணைமடுக்கரையில் கோவில்கட்டி பிரதிஷ்டை செய்தனர். அது முதல் மழை தட்டாமல் பெய்வதாகவும் இந்தக் குடியேற்றப்பகுதியை எல்லாம் அந்த அம்மனே காத்து வருவதாயும் ஓர் அன்பர் தெரிவித்தார்,

சென்ற ஆண்டில் கடும் வெயிலுடன் அம்மை வந்தாராம் இவ்வாண்டிலோ பெரியமழையுடன் வந்தார். வழியெல்லாம் அன்பர்கள் தோரணங்கள் கட்டி, பூரண கும்பங்கள் வைத்து, வரவேற்றுவழிபட்டார்கள். மழை அதிகம் பொழிந்தது. என்றாலும் மக்கள் அதைப் பொருட்படுத்தாமல், மழையில் நனைந்து வரவேற்ற காட்சி மறக்கமுடியாதது. ஏழைமக்கள்போட்ட பணம் உண்டியல் நிறைந்துவிட்டதாம். பொதுமக்களுக்குத்தான் எவ்வளவு பக்தி! இப்பணத்தை கோவில் திருப்பணிக்கு செலவிடுவரென்று தெரிகிறது.

அப்பகுதியிலே பல ஊர்களிலும் பவனி வந்து அம்மன் வருகிற புதன்கிழமை சித்ரா பௌர்ணமியன்று இரணைமடு திரும்பி, அங்கு பொங்கல் மகோற்சவம் மிகவிமரிசையாக நடைபெறுமாம். ஏராளமான மக்கள் தனித்தனியே பொங்கல் பானைகள்வைத்து நிவேதித்து வழிபடுவர்.

இரவில் அம்பாள் பூந்தண்டிகையில் எழுந்தருளி, மறுநாள் உதயத்தில் இரணைமடுக்குளத்தில் தீர்த்தமளிப்பாரென்றும், கதாப்பிரசங்கம், கூட்டுப்பிரார்த்தனை பரதநாட்டியம், காவடி முதலியன நடைபெறுமென்றும், பல கட்சித்தலைவர்களும் எவ்வித பேதமின்றி, அங்குகூட்டத்தில் பேசுவரென்றும், துண்டுப்பிரசுரம் கூறுகிறது. 4-ந் திகதி மாலை 4 முதல் மறுநாட்காலை 10 வரையும் உருத்திரபுரம், பரந்தன், கிளிநொச்சி, கண்டாவளை, தருமபுரம், பூநகரி, துணுக்காய் ஆகிய இடங்களிலிருந்து ஆலயத்துக்கு இ. போ. ச. பஸ் வசதி செய்துள்ளனராம்.

ஃ ஃ ஃ

வான்முகில் வழாதுபெய்ய அம்மன் மகாதேவ ஆசிரமத்துக்கு வந்தபோது கும்பிட்டு வணங்கி, அவசரமாக என்னை அழைத்த காரணத்தைக் கேட்டேன். நீர்வளமும் நிலவளமும் மிக்க இப்பகுதிக்கு அடிக்கடி வரவேண்டுமென்றும், யாழ்ப்பாணத்துக்குமட்டுமன்றி, நாட்டுக்கெல்லாம் இப்பகுதியிலிருந்து உணவூட்டத் திருவுளம் கொண்டிருப்பதாகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

இந்த மழையை அங்கு பலர் வரவேற்றனர். ஆனல் வவனியாப் பக்கம் வெங்காயம் முதலிய பயிர்களுக்கு இம்மழையால் அதிக சேதமாம். ஏன் இப்படி? எளிய மக்களை இப்படி சோதனை செய்ய வேண்டுமென்று கேட்டேன். அம்மன்புன்முறுவல் பூர்த்தார். ஒன்றும் புரியவில்லை.

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிஞர் அண்ணா விரைவில் இலங்கை வருவார்

## யாழ்ப்பாணத்தில் இலட்சிய தம்பதிகள் பேட்டி

### இலங்கை பத்திரிகைகளுக்கு 'நடிகமணி' நாராயணசாமி புகழ்மாலை

கலைஞனுக்கு அரசியல் கூடாது என்பது பொருத்தமற்றதொரு 'பைத்தியக்காரத்தனமான' வாதமாகும். கலைஞனும் மனிதன்தானே. அவனுக்கும் மற்றவர்களைப் போல வாக்குரிமை உண்டு அவனும் பலவிதமாக, அரசாங்கத்துக்கு வரிப்பணம் செலுத்துகின்ருன். இத்துறையில் மட்டும் அவன் ஏன் ஒதுக்கப்படவேண்டும்? ஒவ்வொரு மனிதனுக்கும் கொள்கை இருக்கவேண்டும்'' என்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த இலட்சிய நடிகர் திரு. எஸ். எஸ். ராஜேந்திரன் நேற்றுக் காலை ''ஈழநாடு'' உட்பட சில பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

இப்பேட்டியின்போது இலட்சிய தம்பதிகள்'' எஸ். எஸ். ராஜேந்திரன்-விஜயகுமாரி ஆகியோருடன் ''பழம்பெரும் நடிகர்'' திரு டி. வி. நாராயணசாமியும் இருந்தார்பேட்டியின்போது கேட்கப்பட்ட கேள்விகளும் பதிலும் இங்கே சுருக்கமாகத் தரப்படுகின்றன.

#### இலங்கை விஜயம்

கேள்வி: பூர்த்திபெறும் நிலையில் இருக்கும் உங்களின் இலங்கை விஜயம் எப்படி இருக்கிறது?

பதில்: அப்பப்பா...நாங்கள் எதிர்பார்த்ததற்கு கூடவே எமது விஜயம் வெற்றி பெற்றிருக்கிறது. ஈழத்து மக்கள் இவ்வளவு கலையார்வம் உடையவர்களாக இருப்பார்கள் என்று நாங்கள் சிறிதுகூட நினைத்திருக்கவில்லை.

கேள்வி: இவ்விஜயம்தான் உங்களின் முதலாவது விஜயம் என்று நினைக்கின்றேன் மீண்டும் வர உத்தேசம் உண்டா?

பதில்: நான் மட்டுமல்ல, அதிகமான கலைஞர்களுடன் இங்கு விஜயம் செய்து பல பகுதிகளின் முன்னேற்றத்துக்காக நிதி சேகரித்துக் கொடுக்க நான் திட்டமிட்டிருக்கின்றேன். இலங்கை அரசாங்கம் மீண்டும் அனுமதி கொடுத்தால் நிச்சயம் நாங்கள் இங்கு வருவோம்

#### தி. மு. க.

கேள்வி: இங்குள்ள தி. மு. கழகங்களுக்கும் இந்திய தி. மு. கழகங்களுக்கும் தொடர்பிருப்பதாகக் கூறுகின்றனர். இதுபற்றி நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?

பதில்: நிச்சயமாக இதனை நான் மறுக்கின்றேன். ஒவ்வொரு நாட்டினது கலாச்சாரத்தை விளக்கும் வகையில் ஏதோ ஒரு விதத்தில் ''அமைப்புகள்'' இருக்கத்தான் வேண்டும் இதனை வரவேற்கின்றேன் ஆனல் அந்த அமைப்புகள் அந்த நாட்டினது கலாச்சாரத்தை வளர்க்கக்கூடியதாக இருக்க வேண்டும் இலங்கை தி மு க கழகத்துக்கும் எமது கழகத்துக்குமிடையே கொள்கைகளில் எத்தனையோ வேறுபாடுகள் இருக்கின்றன

#### சிக்கனமான நிகழ்ச்சி

கேள்வி: இலங்கையில் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியை நடத்துவதற்கு ஏன் விரும்பினீர்கள்?

பதில்: வில்லுப்பாட்டு நிகழ்ச்சியை நடத்துவனு மிகவும் சுலபம். அத்துடன் சிக்கனமும் கூட எனக்கு பல நிகழ்ச்சிகளை நடத்தத் தெரியும். ஆனல் அதெல்லாம் இங்கு நடத்துவதென்ருல் பெரிய கோஷ்டியுடன் வரவேண்டுமல்லவா? இது எமது கன்னி விஜயம். அடுத்த விஜயம் வேறுவிதமாக இருக்கலாம்.

கேள்வி: கண்ணகிக் கதையைத் தாங்கள் தேர்ந்தெடுக்கக் காரணம்?

பதில்: இலங்கைக்கு இது மிகவும் பொருந்தும் என்று நான் நினைத்தேன். இந்தியா என்ருல் தி. மு. கவைப் பற்றி, வில்லுப்பாட்டில் படபடவென்று பொரிந்து தள்ளியிருப்பேன். நான் இங்குஒரு கலாச்சாரத் தூதுவனக விஜயம் செய்தது...இங்குள்ள மக்களைப் புரிந்துகொள்ளவும் அவர்களை மகிழ்வூட்டவும் தான். இந்தக் கொள்கை பூரணத்துவம் பெறவேண்டாமா?

### பேட்டி: மகான்

#### கலைஞர்களுடன் தொடர்பு

கேள்வி: இலங்கை கலைஞர்களுடன் உங்களுக்கு தொடர்பு உண்டா?

பதில்: இல்லை. ஆனல் இனிமேல் ஏற்படலாம்.

கேள்வி: இங்குள்ள கலைஞர்களைப் பற்றி தெரிந்திருக்கிறீர்களா?

பதில்: ஆம், ஓரளவு.

கேள்வி: படத் தொழிலில் தீவிரமாக ஈடுபட்டிருக்கும் நீங்கள் இயற்கைக் காட்சிகள் ததும்பும் இலங்கையிலும் படம் பிடித்தால் என்ன?

பதில்: இதுபற்றி உடனடியான திட்டங்கள் எதுவும் எம்மிடம் இல்லை. ஆனல் ஆலோசிக்க இடமுண்டு.

#### விஜயகுமாரி

கேள்வி: நீங்கள் உங்கள் கணவரைத் தவிர வேறு யாருடனும் சேர்ந்து நடிக்க மாட்டீர்கள்..?

விஜயகுமாரி: ஆமாம்...

கேள்வி: அப்படியென்ருல் உங்கள் கணவருக்கும் அந்தக் கொள்கை வேண்டாமா...?

விஜயகுமாரி: (சிரித்துக் கொண்டே) அது அவரது விருப்பம். எனக்கு இதில் ஆட்சேபனையே இல்லை. நான் எனக்காகவே ஒரு கொள்கையை வகுத்துக் கொண்டேன். இதில் அவர் சம்பந்தப்படவில்லை.

#### சொந்தக்காரர்கள் போல..

கேள்வி: உங்களின் இலங்கை விஜயம் எப்படி இருக்கிறது?

விஜயகுமாரி: இங்குள்ள மக்கள் எங்களது சொந்தக்காரர்களைப் போல பழகுகின்றனர், அன்புள்ளவர்கள். ஆதரவுமிகுந்தவர்கள், இனிமையாக சிரித்துச் சிரித்து பேசுபவர்கள்.

கேள்வி: மன்னிக்கவேண்டும்... பெண்களுக்கு அரசியல் அவசியம்தானு...?

எஸ் எஸ் ஆர்: ஏன் இந்தியப் பிரதமர் ஒரு பெண் தானே?

கேள்வி: நீங்கள் என்ன சொல்கிறீர்கள் ... பெண்களுக்கு அரசியல் வேண்டுமா நீங்களஅரசியலில்ஈடுபாடா?

பதில்: (சிறிதுநேரம் மௌனம்) ஐயோ... இங்கு சொல்லப் பயமாகவிருக்கிறது (சிரிப்பு)

எஸ் எஸ் ஆர்: (குறுக்கிட்டு) இது எனக்குப் பிடித் 'சப்ஜெக்ட்' சும்மா... அப்படியே பொரிந்து தள்ளிவிடுவேன் (சிரிப்பு) ஆனல் இங்கு... இந்தியாவில் நான் பேசுவதெல்லாம் அரசியல் தானே?

கேள்வி: அண்ணுதுரையைப் போன்ற ஜனநாயகப் ... இங்கு அனுப்புவீர்களா? அவர் இலங்கைக்கு விஜயம் செய்யும் நோக்கமுண்டா!

எஸ் எஸ் ஆர்: அண்மையில்தான் மலேசியாவுக்கு விஜயம் செய்திருந்தார். இலங்கைக்கு வருவதற்கு அவருக்கு விருப்பமுண்டு அப்பிரயாண சந்தர்ப்பம் விரைவில் ஏற்படுமென்று நினைக்கின்றேன். இலங்கை அரசாங்கமும் இதற்கு அனுமதி கொடுத்தால் அவர் விரைவில் இங்கு வருவார்

கேள்வி: உங்களின் திரை அனுபவம் எப்படி ஆரம்பித்தது?

எஸ் எஸ் ஆர்: அதுபெரிய கதை. சுருக்கமாகச் சொல்லப் போனல், டி கே எஸ் நாடகக்கம்பனிதான் எனது ஆரம்பம். டி கே எஸ் சகோதரர்கள் 'கதாநாயகன்' பாத்திரத்தை ஏற்று நடித்து முடித்ததற்குப் பின்னர் வெளியாரில்முதன் முதலாக நான்தான்அப்பாத்திரத்தை ஏற்று நடித்தேன். அப்பொழுது நான் சிறுவன்.

கேள்வி: யாழ்ப்பாண மக்களுக்கு தாங்கள் வழங்கும் செய்தி என்ன?

எஸ் எஸ் ஆர்: 'இலங்கை வாழ் மக்களைப்பற்றி எங்களுக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை. நாங்கள் எதிர்பார்த்ததற்கு எவ்வளவோ மேலாகஈழமக்கள் எங்களுடன் பழகிவிட்டனர். கலையார்வம் மிக்க இந்த நாட்டு மக்கள் எங்களின் இதயத்தில் என்றென்றும் குடியிருப்பார்கள்.

#### 'ஈழநாடு'க்கு பாராட்டு

இலட்சிய தம்பதிகளிடம்சில ''ஈழநாடு'' பத்திரிகைகள் வழங்கப்பட்ட பொழுது பத்திரிகை மீது மிகவும் உன்னிப்பாக நோட்டம் விட்ட பின்னர் செய்திகள் குறித்து பாராட்டுதல்களும் வழங்கினர்; இலங்கையின்பெயரில் பொருத்தமான பத்திரிகை ஒன்று தமிழர் வாழும் பகுதியிலிருந்து வெளிவருவது குறித்து நடிகர் திரு. எஸ்.எஸ். ராஜேந்திரன் புகழ்மாலை தெரிவித்தார்.

#### டி. வி. நாராயணசாமி பாராட்டு

பழம்பெரும் நடிகர் திரு டி வி நாராயணசாமி பேட்டியின் போது தெரிவித்ததாவது:-

'இலங்கை மக்கள் எங்களை வெகுவாகக் கவர்ந்து விட்டனர். இலங்கையில் நாங்கள் கண்ட காட்சிகள் கண்கொள்ளா இன்பக்காட்சிகளாகும். இங்குள்ள மக்கள் பெருந்தன்மை மிக்கவர்கள். ரசிகத்தன்மை வாய்ந்தவர்கள். கலைகளைப் பேணுபவர்கள். கலைஞர்களைக் கௌரவிப்பவர்கள், இலங்கையிலுள்ள பத்திரிகைகள் உண்மையான பத்திரிகைத் தர்மத்தைக் கடைப்பிடிக்கின்றன. இந்தியாவில் கூட இப்படியான கொள்கைகளையுடைய பத்திரிகைகள் குறைவு. உண்மையான, நேர்மையான செய்திகளை வெளியிடும் பெரிய பண்பு இங்குள்ள பத்திரிகைகளுக்குண்டு ஹட்டனுக்கு நாங்கள் விஜயம் செய்திருந்தபொழுது நெரிசலில் ஒரு சிறுவன் காயமடைந்தான். ஆனல் இதனைப் பெரிதுபடுத்தி கயிறுதிருத்தி இந்தியப் பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டிருக்கின்றன ... இலங்கை

### கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், திங்கள் கல்வியங்காடு வீரபத்திரர் கோவில் கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

### எதிரிகள் விடுதலை

மாவிட்டபுரம், ஞாயிறு அச்சுவேலி வளலாயைச் சேர்ந்தவர்களான மார்க்கண்டு கந்தசாமி, சினியன் மாணிக்கம் ஆகிய இருவரும் சென்றவருடம் நவம்பர் மாதம் பதின்மூன்ரும் திகதி அதே ஊரைச்சேர்ந்த பண்டாரம் தருமலிங்கம் என்பவரைக் கொக்கிச் சத்தகத்தால் வெட்டிப்படுகாயம் ஏற்படுத்தியதாகக் காங்கேசன்துறைப் பொலிசாரால் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எவ். எச். அத்துருபானு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

காங்கேசன்துறை ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் ரி. இராசேந்திரம், பண்டாரம் தருமலிங்கம், சண்முகம் கிருஷ்ணபிள்ளை, சபாலிங்கம் நவரட்ணம், சின்னத்தம்பி சணபதிப்பிள்ளை, சினியன் மாணிக்கம் ஆகியோர் சாட்சியமளித்தபின் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் தொகுப்புரை நிகழ்த்தினர். தொகுப்புரையின்பின் நீதிபதி எதிரிகளை சுற்வாளிகளாகக்கண்டு விடுதலைசெய்தார். காங்கேசன்துறைப் பொலிசாரின் உதவியுடன் வழக்கறிஞர் திரு, ரி. குணரத்தினம் வழக்கை நடத்தினர். எதிரிகள் தரப்பில் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானர்.

### ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அன்று அங்குவந்து, கிளிநொச்சியிலே மாதர் ஆசிரமம் ஒன்றையும் ஸ்தாபிக்கச்செய்தார். மகாதேவ ஆசிரமத்திலுள்ள அன்னை, மாதர் ஆசிரமத்திலிருந்து தவம்செய்யப்போவதாயும், ஆதரவற்ற பெண்களுக்கு அந்தப்புதிய ஆசிரமம் ஆறுதலளிக்குமென்றும் அறிய மிக மகிழ்ச்சியாக இருந்தது. பல இன்னல்களுக்கு உட்பட்ட நம் பெண்மணிகளுக்கு இலங்கையில்ஆறுதலளித்து கைதூக்கிவிட ஓர் இந்து ஸ்தாபனமும் சரிவர நடைபெறவில்லை. அப்பெருங் குறையைத் தீர்க்க இப்புதிய ஆசிரமம் மூலம் அம்பாள் திருவுள்ளம் கொண்டுள்ளார்போலும்.

பின் விடைபெற்று அவசரமாக இ.போ.ச. பஸ் மூலம் திரும்பினேன் நல்ல மழை. பஸ்ஸுக்குள்ளும் பெய்தது! ஓர் அன்பர் பஸ்ஸுக்குள் குடைபிடித்தார். இக்காட்சியைப் போட்டோ பிடித்திருக்க வேண்டும்! இதைவிட வேடிக்கைஎன்னவெனில், அந்தக்குடையும் ஒழுகி வழி எல்லாம் ஏகதாரை அபிஷேகம்!

ஃ ஃ ஃ

பழல நின்னடி சூடிய பாலனைக், கழகின் மேல் வைத்த காலனைச் சாடிய, அழகனே அணிவீழிமிழலையுள், குழகனே அடியேனைக் குறிக்கொளே.

— அப்பர் சுவாமிகள்

பத்திரிகைகள் இந்தால் மக்கள் வெறும் பூசல்களும் போட்டிகளும் பெருமளவில் தவிர்க்கப்படும் இயற்கை அன்னை வாழும் இலங்கை நாடும்இந்த நாட்டுமக்களும் எங்களை விசுவாசத்துடன் வரவேற்கின்றன. அவர்களையும் நாங்கள் திருப்திப்படுத்திவிட்டோம்'

#### கண்டிக்குப் புறப்பாடு

இலட்சியத்தம்பதிகளும் கோஷ்டியினரும் நேற்றுப் பகல்சரியாக 12-10-க்கு கார் மார்க்கமாக கண்டிக்குப் பயணமானர்கள்

### பரந்த வாழ்க்கை..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தார். சம்மேளன பொதுச் செயலாளர் பாரிஸ்டர் எம் சிவானந்தன் பத்துதீர்மானங்களை சமர்ப்பித்தார்

திரு பொன்னம்பலம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: தொழிலாளர் மத்தியில் எந்த நிமிடம் தகுதி வாய்ந்த ஒருவர் தலைமைதாங்க முன்வருகிருரோ அதே நிமிடம் தான் தொழிற்சங்கத்திலிருந்து வெளியேறிவிடுவேன் அதுவரைதான் தொழிற்சங்கத்தில் இருப்பேன்

இவ்வளவு காலமும், இடதுசாரி தலைவர்கள் தொழிலாளர்களுக்காக ஒருஅளவு பாடுபட்டுவந்தனர். ஆனல் இன்று தொழிலாளரை கைவிட்டுவிட்டனர். இனிமேல் ஒரு தமிழனது மரியாதையுடனும், மானத்துடனும், இடதுசாரித் தொழிற்சங்கங்களில் இருக்கமுடியாத காரணத்தினல்தான், அச் சங்கங்களிலிருந்து வெளியேறி எமது சம்மேளனத்தில் சேர்ந்துள்ளனர். தொழிலாளர் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் மட்டும் இருந்துகொண்டு நன்மை பெறமுடியாது. இலங்கை பூராவும் பரந்திருப்பதால்தான் நன்மைபெறமுடியும் அகிலஇலங்கை ரீதியாக உள்ள எமது சம்மேளனத்தில், இடதுசாரிசங்கங்களில் இருந்து வெளியேறியவர்கள் சேர்ந்துள்ளனர்

யாழ்ப்பாணத்தில் இந்து பல்கலைக்கழகம் அமைக்கும் விஷயமாக தனி ஒரு கூட்டம் வைத்து, விஷயத்தை தெளிவாக்க தீர்மானித்துள்ளேன்.

மார்ட்டின் கமிஷன் அறிக்கையை அமுல் நடத்தக் கூடாதென அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளேன். யாழ்ப்பாண மாநகரசபை வட்டாரங்கள் தவருன முறையில் பிரிக்கப்பட்டால் அரசாங்கத்தில் பிளவு ஏற்படும் என்பதை தெரிவிக்கவிரும்புகிறேன்.

சம்மேளன உபதலைவர் திரு எம் சிவசிதம்பரம் பேசுகையில், சிலரது தலையீட்டினல், யாழ்ப்பாணத்தில் நிறுவப்படவிருந்த இந்துப் பல்கலைக்கழகம் தடைப்பட்டுள்ளதென்று கூறினர்

திருவாளர்கள் எஸ் ஆனந்தசங்கரி, கு மோதிலால்நேரு, நாவேந்தன், கா யோகராசா, மற்றும் பல தொழிற்சங்கபிரதிநிதிகள் பேசினர்கள்

### கம்யூனிஸ்ட்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ணம் ஜின்னு மைதானத்தில் நடைபெற்ற ஐக்கிய மேதினக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

திரு. சரத் முத்தெட்டுகம மேலும் பேசுகையில் கூறியதாவது:

சில தீயசக்திகள் முன்னர் கம்யூனிஸ்ட்கட்சி சிங்கள மக்களுக்கு எதிரான கட்சி எனப் பிரசாரம் செய்துவந்தன. ஆனல் இப்போது தமிழர்களின் எதிரிகள் எனப் பிரசாரம்செய்து வருகின்றன. இவ்விதபொய்ப்பிரசாரத்தினல் மக்கள் ஏமாற்றப்பட்டுவிடக்கூடாது என நான் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த முக்கியத்துவம் வாய்ந்த தினத்தில் வியட்னமில் மக்கள் ஏகாதிபத்திய அமெரிக்கர்களுக்கு எதிராகத் தொடர்ந்திருக்கும் போருக்கு நாம் ஆதரவு தருகின்ருேம் என்பதை பூரணமாக வெளிப்படுத்துகின்ருேம்.

இக்கூட்டம்ஜனுப் உ. ஹமீது தலைமையில் நடைபெற்றது. திருவாளர்கள் பி, குமாரசாமி, எஸ். நடராசா, ஆர் பூபாலசிங்கம், ஜீவா உட்பட பலர் பேசினர். (ந நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெக்சன்

பம்பினுல் நீர்ப்பாய்ச்சுங்கள்

★ சிறந்த பாவிப்பு
★ நல்ல உத்தரவாதம்
★ சக்திமிக்க உழைப்புக்கு
★ நம்பிக்கையான சேவைக்கு

# பெக்சன் பம்புகள்

முதல் மூன்று மாதங்களுக்கும்
ஆரம்ப சலுகையாக
விசேஷ விலையில்
பெற்றுக்கொள்ளலாம்.

**பெக்சன் ஜூனியர்**
**ரூபா 995/-**

**பெக்சன் சீனியர்**
**ரூபா 1395/-**

வடபகுதியில் ஏக விநியோகஸ்தர்கள்

# ஒட்டோஸ் லிமிட்டெட்,

யாழ்ப்பாணம்.

(தரமான நல்ல சேவைக்கு நம்பிக்கை உத்தரவாதமான வர்த்தக ஸ்தாபனம்.)

கிளை ஸ்தாபனங்கள்

வவனியா — மன்னார் — முல்லைத்தீவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழக்கறிஞர் வீட்டில் திருடினராம்

### 2 வருடம் கடூழியச் சிறை

மாவிட்டபுரம், சனி

பல பெயர்களை உடையவரும், பலதரம் திருட்டுக் குற்றங்களில் தண்டிக்கப்பட்டவருமான ஒரு புகைப்படக் கலைஞர் சுன்னுகம் பொலிஸ்பகுதியிலுள்ள ஒரு வழக்கறிஞரின் வீட்டில் திருடிய குற்றத்திற்காக மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எப். எச் அத்துறுபாஞ இரண்டு வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்தார்.

இவ்வழக்கில் கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த யோசேப் அந்தோனி பேரின்பநாயகம் அல்லது அலோசியஸ் பெஞர்ண்டோ அல்லது பேஞர்ட் பெர்ஞண்டோ என்பவர் உடுவில் மானிப்பாய் ரேட்டைச் சேர்ந்த பிறைற் இராசக்கோன் இராசரத்தினம் (வழக்கறிஞர்) என்பவருடைய வீட்டை, திருடும்நோக்கமாக உடைத்ததாகவும், ரொக்கப்பணமும், நகையும் உட்பட 1775 ரூபாயை பெறுமதியான பொருட்களை திருடியதாகவும் சுன்னுகம் பொலிசாரால் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

சுன்னுகம் பொலிசாரின் உதவியுடனும் வழக்கறிஞர் திரு. எஸ். நடராசாவின் அனுசரணையுடனும் திரு. ஆர். கண்ணுத்துரை வழக்கை நடத்திஞர். எதிரிதரப்பில் வழக்கறிஞர்களான திருவாளர்கள் பி. யோகசுந்தரம், ரி. தம்பிரத்தினம் ஆகியோரின் அனுசரணையுடன் திரு. மகிந்திரராசா ஆஜராஞர். எதிரிதரப்பு வழக்கறிஞர் திரு. மகேந்திரராசா தொகுப்புரையின் பின் நீதிபதி எதிரியைக்குற்றவாளியாகக் கண்டார். பொலிசார் எதிரி குற்றப்பத்திரிகையில் கூறியுள்ள பெயர்களைவிட மற்றும் பல பெயர்களிலும் இதற்கு முன்னர் வீடு உடைத்தல், களவெடுத்தல் போன்ற குற்றச்சாட்டுகளில் எட்டுத்தடவை தண்டனை பெற்றதாகக் கூறிஞர்கள்.

நீதிபதி 1-ம், 2-ம் குற்றச்சாட்டுக்களுக்கு தலா ஒரு வருடக் கடூழியச் சிறைத் தண்டனையும் பலதரம் குற்றப்பட்டவர் திரும்பவும் குற்றம் செய்தபடியால் இரண்டு வருட கடூழியச் சிறையும், இரண்டுவருட பொலிஸ் கண்காணிப்பில் இருக்கும்படியும், தண்டனைகளை ஏககாலத்தில் அனுபவிக்கும்படியும் தீர்ப்பை ஆட்சேபித்து அப்பீல்செய்வதாக இருந்தால் 1500 ரூபாய் பிணையில் செல்லும்படியும் மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

---

## அபராதம்

ஊர்காவற்றுறை, ஞாயிறு

நாரந்தனை மேற்கு வாசியான சவிரிமரியநாயகம் என்பவருக்குக் கத்தியால் வெட்டி காயப்படுத்தியதாக அதே ஊரைச்சேர்ந்த அந்திரீசு பிரான்சிஸ் என்பவர் மீது ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் தொடரப்பட்ட வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நீதிபதி திரு. ரி. ஜே. இராசரத்தினம் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது

வழக்காளி சார்பில் புரக்டர் எஸ். ஸி. கதிரவேலு ஆஜராஞர். விசாரணையின் பின் நீதிபதி எதிரியைக் குற்றவாளியாகக்கண்டு 200 ரூபா அபராதம் அல்லது இரண்டு மாதச் சிறைவாசமும் கோர்டுகலையும்வரை மறியலும் விதித்துத் தீர்ப்பளித்தார்.

## சனசமூகநிலைய கலைப்போட்டிமுடிவுகள்

யாழ்ப்பாணம், திங்கள்

நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்தின் 17-வது ஆண்டு விழாவை முன்னிட்டு மேற்படி நிலையத்தின் கலைக் குழுவினரால் நடாத்தப்பட்ட பேச்சுப்போட்டியில் ஆண்களுக்கான கீழ்ப்பிரிவுபோட்டியில் முதலாவது இடத்தை சோ. சோமலிங்கமும் 2-ம் இடத்தை இ. அன்ரனியும், பெண்களுக்கான போட்டியில் முதலாவது இடத்தை இ. இரஞ்சினியும், இரண்டாம் இடத்தை இ. செல்வமலரும், மூன்ரும் இடத்தை இ. சந்திராவும் பெற்றனர்.

மத்தியபிரிவில் 1-ம் இடத்தை செ. கனகராசாவும், 2-ம் இடத்தை இ. சரோஜினிதேவியும், மேற்பிரிவில் 1-ம் இடத்தை சோ. ஜெயசுந்தரமும், 2-ம் இடத்தை செ. கணேசலிங்கமும் பெற்றனர்.

கிராமிய சம்பாஷணையில் 1-ம் இடத்தை கா. சிவகுருநாதனும் நாகராசாவும், 2ம் இடத்தை என். எஸ். லோகேஸ்வரன் அருள்பிரகாசம் ஆகியோரும் முறையே பெற்றனர். ——

## மரதன் ஓட்டமுடிவுகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நல்லூர் தெற்கு சனசமூகநிலையத்தின் 17-து ஆண்டு விழாவையொட்டி நடைபெற்ற 5 மைல் மரதன் ஓட்டப் போட்டியில் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த சி. சாம்பமூர்த்தி முதலிடத்தைப் பெற்ருர். மற்றும் அரியாலை ஐக்கிம் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ந. கதிர்காமநாதன் 2-ம் இடத்தையும், கொட்டடி இளைஞர் கழகத்தைச்சேர்ந்த எம். ஏ. றசீன் 3-ம் இடத்தையும், நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்தைச் சேர்ந்த செ. கணேசலிங்கம் நான்காவது இடத்தையும், கொழும்புத்துறையைசேர்ந்த க. சிவபாலன் ஐந்தாம் இடத்தையும், நல்லூரைச் சேர்ந்த த. பாலச்சந்திரன் ஆரும் இடத்தையும் பெற்றனர்.

---

## கலைப் போட்டிகள்

வட்டுக்கோட்டை, ஞாயிறு

வட்டுக்கோட்டை கலைக் கழகத்தின் நான்காவது ஆண்டு நிறைவுவிழாவையொட்டி வட்டுக்கோட்டைத்தொகுதியுள்ளமைந்த பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், மாதர்-இளைஞர் சங்கங்கள் போன்ற எல்லா நிறுவனங்களுக்குமிடையில் இசைக்கலை, பேச்சுக்கலை, நாடகக்கலைப் போட்டிகள் ஒழுங்குசெய்யப்படுகின்றன. போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் நிறுவனங்கள், கலைக்கழகம், கலாநிலையம், வட்டுக்கோட்டை என்ற விலாசத்துடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## மாதமொன்றுக்கு 2,500 பேருக்கு வேலை

கொழும்பு, ஞாயிறு

மத்திய தொழிற்கந்தோர் மாதமொன்றுக்கு 2,500 பேருக்கு வேலைவாய்ப்பு அளித்துவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சென்ற மாதத்தில் இக்கந்தோர் அரசாங்கக் காரியாலயங்களிலும், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களிலும் 2,590 பேருக்கு வேலைவாய்ப்பளித்தது.

வேலை அற்றவர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் புதிய திட்டம் வெற்றியளித்து வருவதாகத் தொழில் உதவிக் கமிஷனர் திரு. டி. பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட்

# கடுமையான போட்டியொன்றில் கூட யாழ். வீரர்கள்தங்கள் தகுதியை காட்டிவிட்டனர்

## "பீல்டிங்"கில் கொழும்பு கோஷ்டி; துடுப்படியில் யாழ். கோஷ்டி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் பாடசாலைகள் தெரிவுக் கோஷ்டிக்கும், கொழும்பு தெற்கு பாடசாலைகள் தெரிவுக்கோஷ்டிக்குமிடையே யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி மைதானத்தில் இரு தினங்கள் நடைபெற்ற கிரிக்கெட்போட்டி மழை காரணமாக ஓரளவு பாதிக்கப்பட்டபோதிலும், யாழ்ப்பாணப் பாடசாலை வீரர்களின் துடுப்பெடுத்தாட்டமும், கொழும்பு தெற்கு பாடசாலைகள் வீரர்களின் "பீல்டிங்"கும், பார்த்திருந்த கிரிக்கெட் ரசிகர்களுக்கு ஒரு தனியான உற்சாகத்தை அளித்துவிட்டது என்பதை மறுக்கமுடியாது.

### யாழ். கோஷ்டி

இப்போட்டியில் யாழ்ப்பாணம் கோஷ்டிதான் முதலில் துடுப்பெடுத்தாடியது. இதில் ஏபிரஹாம் கூடுதல் (31) ஓட்டங்கள் எடுத்திருந்தார். எதிர்பாராதசிலவீரர்கள் குறைவான ஓட்டங்களைப் பெற்றிருந்த பொழுதிலும், இவர்களது கிரிக்கெட் ஆட்டம் ரசிகர்களுக்கு உற்சாகத்தை அளித்திருந்தது. ராஜரத்தினம் 28 ஓட்டங்களும் கணேஷ்குமார் 17 ஓட்டங்களும் கூடுதலாக எடுத்திருந்தனர். மொத்தமாக இக் கோஷ்டி சகல விக்கட்டுகளையும் இழந்து 158 ஓட்டங்கள் பெற்றது.

### தென்னக்கோன்

இதில் அகில இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் வீரர் தென்னக்கோன்மூன்று விக்கட்டுகளைக் கைப்பற்றியிருந்தது குறிப்பிடத்தக்கது. தளையசிங்கம் 4 விக்கட்டுகளை வீழ்த்தியிருந்தார்.

### கொழும்பு கோஷ்டி

கொழும்பு தெற்கு கோஷ்டியினர் தமது முதல் இன்னிங்ஸில் மொத்தம் 106 ஓட்டங்களைப் பெற்றது—யாழ்ப்பாணக் கோஷ்டியின் விளையாட்டின் தரத்தை ஓரளவு கணிக்கக்கூடியதாக இருக்கிறது.

### 5ஓட்டங்களுக்கு குறைவாக எடுத்தவர்கள் 6 பேர்

தென்னக்கோன் 8ஓட்டங்கள் மட்டுமேஎடுத்துநிர்மலானந்தாவின்பந்துவீச்சுக்கு ஆட்டமிழந்தது இக்குறிப்பிடத்தக்கதுநிர்மலானந்தாவின் பந்து வீச்சுக்கு பீட்டடி. நீலும் ஆட்டமிழந்தார். கொழும்பு தெற்கு கோஷ்டி தனது முதல் இன்னிங்ஸில் 106 ஓட்டங்கள் எடுத்ததால் பீட்டடிநீ மட்டுமே 31 ஓட்டங்கள் கூடுதலாக எடுத்திருந்தார். சிறிசேஞ 15, ஜயசேகரா 15, ராஷபக்ஷா 13 ஓட்டங்கள் எடுத்திருந்தனர். கணேசகுமார், நிர்மலாநந்தா, சூரியகுமார் ஆகியோரின் பந்து வீச்சுக்களினுல் தளையசிங்கம்—05, யேசுதாசன்—02 லியனகே—03, ஒப்பாத்தா—00, ஸ்கந்தகுமார்—00, விமலரன்ஞ—05 ஆகியோர் ஐந்துஓட்டங்களுக்குக்குறைவாகவே எடுத்தது கவனிக்க வேண்டிய ஒருகட்டமாகும்.

### 2-வது இன்னிங்ஸில்

யாழ்ப்பாணம் கோஷ்டி தனது 2-வது இன்னிங்ஸில் 9 விக்கட்டுகள் இழந்து மொத்தம் 77 ஓட்டங்கள் எடுத்தது—இதற்கு கொழும்பு தெற்கு கோஷ்டியினரின் 'பீல்டிங்' காரணமாகும். யாழ்ப்பாணம் கோஷ்டி தனது இரண்டாவது இன்னிங்ஸில் ஒன்றரை மணி நேரத்தில் பத்து ஓட்டங்கள் மட்டுமே எடுத்திருந்தது—கொழும்பு தெற்கு கோஷ்டியினரின் விளையாட்டுத் தரத்துக்கு ஒருசான்ருகும்.

### 'சிக்ஸர்' வெளுத்தவர்

யாழ்ப்பாணம் பாடசாலைகள் கோஷ்டியின் இரண்டாவது இன்னிங்ஸில் குறிப்பிடத்தக்கதோர் அம்சம். சிவசோதி ஒரு 'சிக்ஸர்' வெளுத்ததுதான் உதனைக் கொழும்பு தெற்கு [illegible] கொழும்பு தெற்கு வீரர் ஸ்கந்தகுமார் கூடுதலான மூன்று விக்கெட்டுகளைக் கைப்பற்றியிருந்தார்.

### ஒரு கண்ணேட்டம்

இந்தக் கிரிக்கெட் போட்டியில் இருதரப்பு வீரர்களும் இரு துறைகளில் தங்களது சாதனைகளைக் காப்பாற்றியிருக்கின்றனர். யாழ்ப்பாணம் பாடசாலைகள் தெரிவுக்கோஷ்டி முதல் இன்னிங்ஸில் கொழும்பு தெற்கு கோஷ்டியினர் எடுத்த ஓட்டங்களிலும் பார்க்க கூடுதலான ஓட்டங்கள் பெற்றிருக்கின்றனர். இந்த வகையில் யாழ்ப்பாணம் பாடசாலைகள் கோஷ்டிக்கு ஒரு 'அப்ளாஸ்' கொடுக்கலாம். இதே நேரத்தில் கொழும்பு தெற்குக் கோஷ்டியினரின் சுறுசுறுப்பான விளையாட்டினுல் யாழ். கோஷ்டி தனது 2ம் இன்னிங்ஸில் குறைவான ஓட்டங்களைப் பெற்றிருக்கிறது. இந்தவகையில் கொழும்பு தெற்குக் கோஷ்டியையும் பாராட்டாமல் இருக்கமுடியாது. மொத்தத்தில் யாழ்ப்பாணம் பாடசாலைகள் தெரிவுக்கோஷ்டி தனது தரத்தை இப்போட்டியிலும் நிலைநாட்டிவிட்டது.

'அவதானி

## எதிர்ப்பும் ஆதரவும்

சுழிபுரம், ஞாயிறு


பண்டத்தரிப்பு கிராமசபை மாதாந்தக் கூட்டத்தில் மாட்டிறைச்சிக் கடை திறக்க அனுமதி கோரப்பட்ட பிரேரணை அங்கத்தவர்களால் ஏகமனதாக நிராகரிக்கப்பட்டு, சங்கானைப் பொலிஸ் அதிகாரி திரு. சி. டி. மென்டிஸின் சேவையைப்பாராட்டும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. கூட்டத்துக்கு கிராமசபைத் தலைவர் திரு. இ. இராமலிங்கம் தலைமை வகித்தார்.

REGAL—JAFFNA
NOW SHOWING!
CARL MOHNER
IDA GALLI
THE FALL OF ROME
(TotalscoPe -- Color)

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
சிவாஜி - தேவிகா
நடித்த
முரடன் முத்து

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45க்கு
மனோகர் - மனோரமா
நடித்த
கொஞ்சும் குமரி

கிங்ஸ்லி பிளாஸா நவா
(கொழும்பு) (வெள்ளவத்தை) (கொம்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30.
போயா நாட்களில் 4 காட்சிகள்.
விஜயா ஸ்ரீகிருஷ்ண மொடேர்ன்
(மட்டக்களப்பு) (திருகோணமலை) (பதுளை)
மொடேர்ன் விஜிதா தீவொளி
(பண்டாரவளை) (ஹட்டன்) (நுவரெலியா)



சிவாஜி கணேசன் - சாவித்திரி
(9 மாறுபட்ட வேடங்களில்)
நாகேஷ் —— மனோரமா
மற்றும் பலர் நடித்திருக்கும்
நவராத்திரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகல சமூகத் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திருமதி சிறிமா பண்டாரநாயக்கா நீண்டகாலம் அவசரகால நிலைமையை அமுலில் வைத்துக் கொண்டு ஆட்சி நடத்தியதை மறந்துவிட்டார் போலும்''

இவ்வாறு பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்கா நேற்று கால்பேஸ் திடலில் நடைபெற்ற தேசிய அரசாங்க சார்பு கட்சிகளின் மேதினக் கூட்டத்துக்கு தலைமைவகித்துப் பேசும்போது கூறினுர்.

சுகததாஸ விளையாட்டரங்கலிருந்துகாலிமுகமைதானத்தை நோக்கிச் சென்ற பிரமாண்டமான ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டார்கள்.

பிரதம மந்திரி தொடர்ந்து பேசியபோது, நாட்டில் அமைதியும் மக்கள் மத்தியில் ஐக்கியமும் இன்று அவசியம் தேவைப்படுகின்றது இந்தக் கடமையைச் செய்வதில் கூட்டரசாங்கம் தவறிவிட்டது. அந்தக் கடமையை நாங்கள் நிறைவேற்றி வருகிறோம், இதைச் செய்வதில் ஏற்படும் எந்தவிதத் தடங்கல்களையும் நாங்கள் சமாளிக்கத்தயாராய் இருக்கின்றோம் நாட்டுமக்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவராய் இருந்தாலும் அவர்களின் பாதுகாப்புக்கு வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்வோம். என்றுர்.

ஜனநாயக ரீதியில் அமைக்கப்பட்ட தேசிய அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு ஜனநாயக முறைச்குப்புறம்பாகஎவரும் முயற்சித்தால் அதனை நிச்சயமாக முறியடிப்போம் என்று பிரதமர் தொடர்ந்து பேசும்போது குறிப்பிட்டார்.

## புதிய நிர்வாகிகள்

இமையாணன், ஞாயிறு

இமையாணன், சிவனடிச் சங்கத்தின் உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர்.

தலைவர்: திரு. செ. விசயரத்தினம், உபதலைவர்; திரு. வி. சிவச்செல்வராசா, காரியதரிசி: திரு. கு. இராசரத்தினம், உபகாரியதரிசி: திரு. ச. சிவசரவணபவ, தனதிகாரி: திரு. இ. சிவராசா, உதவித் தனதிகாரி: திரு. சி. தங்கவேல், பத்திராதிபர்: திரு. பா. சிவபாலதான். நிர்வாக சபை அங்கத்தவர்கள்: திருவாளர்கள் சி ஆனந்தராசா, ப. இராசேந்திரன், சி துரைராசா, சோ. சபானந்தன், சி. பூபாலச்சந்திரன்.

## மரண அறிவித்தல்

கனகபூஷணத்தின் அருமைக்கணவரும் கனகாம்பிகை, விக்னேஸ்வரி, ஜெயராணி, விமலேஸ்வரி, ஜெயகுமார் ஆகியோரின் அருமைத் தந்தையும் இ. வேலும்மயிலும், தெட்ஷணமூர்த்தி, மாணிக்கதியாகராஜா, கோபாலசாமி, நவமணி, ராஜமணி ஆகியோரின் அருமைச்சகோதரருமான ஜெயகுமார்டெக்ஸ்டைல்ஸ் சொந்தக்காரரான திரு இ தேவராசா அவர்கள் நேற்று அகாலமரணமானுர். அன்னுரின் பூதவுடல் இன்று (2-5-66) மாலை 4 மணிக்கு ஆனைக்கோட்டை நாலுகால்மடத்தடியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து ஈமைக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

292

## தமிழ்ப்பல்கலைக் . .

1-ம் பக்கத் தொடர்ச்சி

மேலும் பேசுகையில் கூறியதாவது:

தமிழ் மக்கள் சுயகௌரவத்துடன் வாழவேண்டுமென்பதற்காகவே மாவட்ட சபைகள் வேண்டுமென முயற்சிமேற்கொண்டேன் இதற்கு சில தடைகள் இருந்துவருவது வருந்தத்தக்கது

திருக்கோணமலையில் தமிழ் பல்கலைக்கழம் நிறுவுவதற்காக சுமார் 5 லட்சம் ரூபா திரட்டப்பட்டுள்ளது. ஆனுல் இதுவும் நிறைவேற்ற முடியாதபடி ஒருசிலர் தடையாக இருக்கின்றனர். இது தமிழினத்தின் முன்னேற்றத்துக்கே இடையூருக இருக்கிறது என்பதை இவ்விதம் தடையாக உள்ளவர்கள் உணரவேண்டும்.

திரு. செல்வநாயகம் தலைமையில் இயங்கிவரும் தமிழரசுக்கட்சியின் மொழிப்போராட்டம் தமிழ்மொழியின் அந்தஸ்தை உயர்த்துவதில் ஓரளவு வெற்றிகண்டுள்ளது என்பதை தெரிவிதது்க் கொள்ளவிரும்புகின்றேன். 2500 வருடங்களுக்கு முன் தமிழர் இருந்த நிலையையும் பெருமையையும் பெறுவதற்கு தமிழ்ப்பல்கலைக்கழகம் உதவுவதாக இருக்கும்.

தமிழர்கள் தமக்குள் ஐக்கியத்தை உருவாக்குவதன் மூலமே தமது உரிமைகள் சட்டமூலம் பெறக்கூடியதாகவிருக்கும்,

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத் தலைவர் திரு மு. தம்பிமுத்து தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நல்லூர் எம் பி டாக்டர் இ. எம் வி நாகநாதன் ஊர்காவற்றுறை எம் பி திரு வி. நவரத்தினம் மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகள் பேசினர்.

## புரட்சிகரமான. . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுலபமாகத் தீர்க்கமுடியும்''

யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் நடைபெற்ற இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் மேதினக் கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசிய திரு வி. ஏ கந்தசாமி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவர்கள் ஸ்ரான்லி ரேட்டிலுள்ள தமது காரியாலயத்திலிருந்து சுலோக அட்டைகள் தாங்கியவண்ணம் கோஷமிட்டபடி காங்கேசன்துறை வீதி, பஸ்நிலைய வீதி, ஆஸ்பத்திரி ரேட், மணிக்கூட்டுக் கோபுரவீதி வழியாக ஊர்வலமாகச் சென்று முற்றவெளி மைதானத்தை அடைந்தார்கள்.

திரு. வி. ஏ. கந்தசாமி மேலும் பேசுகையில் கூறியதாவது:

மந்திரிகள் இங்கு வருவதென்றுல் ஊர்வலம் நடாத்த அனுமதிக்கும் அரசாங்கம் தொழிலாளர் தினமாகிய மேதினத்தில் ஊர்வல தடைஉத்தரவு போட்டிருக்கிறுர்கள். எதிர்காலத்தில் இந்த நாட்டில் தொழிலாளர்களை ஒடுக்கி நசுக்கிவிடுவதற்கே இந்த ஏற்பாடு செய்யப்படுகிறது. இதற்கு தொழிலாளர்கள் ஒரு பொழுதும் விட்டுக்கொடுக்க கூடாது.

காலியைச் சேர்ந்த ஜெயசேகரா, நீர்வை பொன்னையன் உட்பட வேறு பல சங்கங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும் உரைநிகழ்த்தினர்

## வேலையில்லாப் பிரச்னைபற்றி நடவடிக்கை

மாவிட்டபுரம், ஞாயிறு

வடபகுதியில் நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்துப் போக்கக்கூடிய வழிவகைகள் தற்போது அரசாங்க இலாகா அதிகாரிகளால் ஆராயப்பட்டு வருகிறது. ஒவ்வொரு காரியாதிகாரி பிரிவிலும்உள்ள கிராம சேவகர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதனை இவ்வாரத்தில் காரியாதிகாரிகளிடம் சமர்ப்பிப்பார்.

கான்பரா, மே 1

ஆஸ்திரேலிய பிரதமர் திரு ஹேரால்ட் தமது 10 நாள் ஆசியவியத்தை முடித்துக்கொண்டிருக்கிறுர்.

## மகாகும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியடி ஸ்ரீகுருநாத சுவாமி கோவிலில் இன்று காலை ஸ்ரீ குருநாத சுவாமிக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் மகாகும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**




# சன்லைட் மங்கை

## அதிர்ஷ்டசாலிகளை பாராட்டுகிறுர் ரூபா 10-00

கொடிகாமம், மீசாலை, சாவகச்சேரி, நுணுவில், சரசாலை, ஊர்காவற்றுறை, புளியங்கூடல், யாழ்ப்பாணம், திருநெல்வேலி, கோண்டாவில், அரியாலை, காரைநகர், பாசையூர், கொழும்புத்துறை, பண்ணை

ஆகிய இடங்களில் அதிர்ஷ்டப் பரிசுகளைப் பெற்ற அதிர்ஷ்டசாலிகளானவர்களின் பெயர் விபரம் வருமாறு:

அன்ரனி, யோசேப், பஸ்தியாம்பிள்ளை, ஏ இராசநாயகம், ஏ பி சபாரத்தினம், எஸ் பத்மநாதன். திருமதி கோமஸ், திருமதி சுந்தரம், திருமதி வருணராசா, ஏ எம் கொலோன், வி ஆசைப்பிள்ளை, சி எஸ் தனசோதி, திருமதி எல் செல்லத்துரை, மரியராணி, மாக்கிறட், புளசம், . மயாவோன், எஸ். எஸ் ஜேம்ஸ், யோ யேசுத்தம்மா, வி பஸ்தியாம்பிள்ளை, எல் பற்றிக்ஸ், எஸ் ஸ்ரீஸ்கந்தராஜா ராஜேஸ் ராஜப்பு, செல்வி எஸ் தோமஸ், கு பூரணம், பத்திமா சவரிமுத்து, மசேலியா, டொமினிக் வசந்தி, டெலன், பத்மா, யோகன், பிரான்சிஸ், எவின், ருக்குமணி, புஷ்பராணி, யேமிஸ், மலர், புஷ்பன், கிருஷ்ணர், விஸிபிறட், வேலுப்பிள்ளை ரீற்டா, சின்னையா, ராஜி, திரவியம் கந்தசாமி, முத்துகுமார் கமலா, ராசதுரை, சதாசிவம், சின்னத்தம்பி ஆறுமுகம், பசிலா, கற்பகம், மலர், சுந்தரம், இராசையா திருஞானம், சின்னத்தம்பி லுத்தம்மா, அஞ்சலா, யோசேப், தம்பித்துரை, சிங்கராஜா, தங்கா, ரீற்டா, பூமணி, வாலாம்பிகை, புவனேஸ்வரி, நமசிவாயம், யசிந்தா, புவனேஸ்வரி, அருள்அம்மா, நடராசா, சொலமன், துரைசிங்கம், சேது செல்வராணி, ரெஜி, சந்திரா, செல்வராசா, ஆஸ் தெய்வஜோதி, சு பொன்னம்மா, வி பாலசுந்தரி, எஸ் ரன்சத்தம், ஜே வேதநாயகம், அந்தோனி அம்மா, அகஸ்ரீனம்மா, க விக்ரோறியா சவுந்தலா, எஸ் சுப்பையா, எஸ் பரமேஸ்வரி, இ கருணு, செ முத்து, ந மத்திலடா, மா பெருநற்அம்மா, பி பஞ்சாச்சரம், இ முத்துக்குமாரு, கே சவுந்திராதேவி, என் சுசிலா, திருமதி எஸ் விநாயகமூர்த்தி, ரி பொன்னுத்துரை, திருமதி நவரத்தினம், ஆர் உருத்திரா, பஞ்சரத்தினம், செல்வி பி மெயிலோர், எஸ் இராசன், சு புவனேஸ்வரி, ரி, கனகரத்தினம், ஞா சரஸ்வதி, எஸ் டபிள்யூ மயில்வாகனம், எஸ் துரைராசா, ரி சண்முகநாசா, எஸ் எம் செல்வநாயகம், ரி சாந்தகுமாரி, கே முத்தையா, ஏ நாகேந்திரம், பொ மனேன்மணி, ஏ ரஞ்ஜினி, திருமதி முத்தாஸியம், எஸ் மறியம்பு, எல் வள்ளியம்மா, ந சுவர்ணு, எம் நலாஞ்ஜிதம் திருமதி சிவராஜரத்தினம், இ அன்னலட்சுமி, த சிவராசா, க பாக்கியம், எஸ் ஜே செல்வநாயகம், திருமதி ஜேம்ஸ், பிரான்சிஸ், தே அந்தோனி, சகுந்தலா, ரி மலர், திருமதி தம்பிநாயகம், சேவியர் ஏ ராஜலக்ஷ்மி, ஜெயரத்தினம், ஜெயரத்தினம், திருமதி காசிநாதன், சார்தா, திருமதி ரி மகாசிவம், வே சின்னையா, திருமதி திருநாவுக்கரசு, திருமதி மேதர், தோமஸ், திருமதி மாட்டின், பிராஞ்சிஸ் சுந்தரம்பிள்ளை, சின்னம்மா பாக்கியம், செல்லம்மா, திருமதி ரி விஸ்வலிங்கம், பாக்கியலட்சுமி, திருமதி யோகம், திருமதி புருடி, திருமதி கே கனகசிங்கம், திருமதி சிவானந்தம், திருமதி என் கணபதிப்பிள்ளை, எஸ் சிவசேகரம்பிள்ளை, முகிடீன் சுல்தான், சண்முகம் தெய்வானை, எஸ் ஏ பிள்ளை, ஆறுமுகம், தம்பிப்பிள்ளை, முத்தையா, ஏ எட்வேட்ஸ், செபமாலை, என் நவமணி, புஷ்பராஜன், கே பாலசுந்தரம், சோமசுந்தரம். கமலாதேவி, பரமசாமி, சின்ஞச்சி, சரோசா, றவிக்கா, திருமதி சின்னத்தம்பி, பரமேஸ்வரி, இ சரஸ்வதி, நா சிவபூரணி, அன்னபூரணம், முத்துமணி சீனிவாசகம், பூமணி, சிரியாவதி, செல்லம்மா தர்மரத்தினம், கனகபூபதி அம்மா, எஸ் ரி அலோசியஸ், லதா, வி பஸ்தியாம்பிள்ளை, மாணிக்கம், எஸ் தம்பிராஜா, சிதம்பரப்பிள்ளை, சின்னராஜா, பி சரோஜா, ரதி, மோகன், தங்கவேலு விரசிங்கம், சின்னையா, தனபாலகுமார்.

சன்லைட் மேலும் பிரகாசமாகச் சலவை செய்கிறது- வேறெந்த சோப்பும் நிகர் நிற்க முடியாத பிரகாசம்.




JWT/S/4x56

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி ... இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு மே மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org